
GOKULAM

பிப்ரவரி 2007 • 80 பக்கங்கள் • விலை ரூ.8/-

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



“நாங்க யார் தெரியுமா?”

வெள்ளி விழா
சிறப்பிதழ்

கோகுலம் 25


'க்ளிக்' கேலரி
ஹாய் காயத்ரி! நீ எப்படி உள்ளே வந்தே?
79-ஆம் பக்கம் பாருங்க
சிறுமி : ஜி.காயத்ரி
படம் : பொள்ளாச்சி சுந்தரம்

கல்கி
தரம் நிரந்தரம்

கோகுலம்

பிப்ரவரி 2007 மலர்: 25 இதழ்: 1

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
– பாரதியார்



அன்புள்ள உங்களுக்கு...



வெள்ளி விழா ஆண்டில் அடியெடுத்து வைக்கும் உங்கள் கோகுலத்துக்கு வாழ்த்து தெரிவித்து நீங்கள் அனுப்பிய கடிதங்கள் மூலம், கோகுலத்தின் மீது நீங்கள் வைத்துள்ள அன்பு புரிந்து மகிழ்ந்தோம். இத்தனை ஆண்டுகளாக கோகுலத்தை வளர்த்த வாசகர்களை மட்டுமின்றி படைப்பாளிகளையும் ஆசிரியர் குழுவில் இருந்தோரையும் நன்றியோடு நினைத்துக் கொள்கிறோம்.

இம்மாதம் முதல் புதிய நண்பர்கள் அறிமுகமாகிறார்கள். தமிழ் மொழியின் இனிமையைச் சொல்ல தமிழரசன் அண்ணா வந்துள்ளார். மேலும் பல அறிவூட்டும் பகுதிகள் நீங்கள் படித்து ரசிக்க காத்திருக்கின்றன.

நன்றி! நன்றி! நன்றி!

'சூப்பர் கையெழுத்து' பகுதியைப் பற்றி அறிவித்ததும் உங்களிடமிருந்து கடிதங்கள் வந்து குவிந்து விட்டன. அனைத்தையும் ஒரே சமயத்தில் வெளியிட வேண்டுமானால் ஒரு முழு கோகுலமே போதாது. ஆகையால் சிலவற்றை இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். அடுத்தடுத்த இதழ்களில் இன்னும் அதிகமாக வெளியாகும். காத்திருங்கள். கோகுலத்தைத் தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். கருத்துகளையும், விமர்சனங்களையும் அனுப்புங்கள்.



அன்புடன்
கோகு

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட்லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்:
சீதா ரவி

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்
எம். மோகன்
ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522 / 2225 0623
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 25 யுஎஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!



குறைந்த முதலீட்டில் நிறைவான வருமான வாய்ப்பு

COURSE DESIGNED :

6 மாதம் முதல் 5 வயது குழந்தைகளுக்கு

- Structured to stimulate maximum brain activity.
- 5 வயதில் 15 வயதிற்குரிய அறிவாற்றலைப் பெறுவார்கள்.
- It's provides Encyclopedia knowledge, create interest in reading skill and produce knowledge in Quantum assessment.
- முற்றிலும் நிரூபிக்கப்பட்ட கல்வி முறை
- Independent and interesting way of learning.
- உலகளவில் பல லட்சக் கணக்கான குழந்தைகள் பயனடைந்துள்ளார்கள்.
- Path to bring your kids into genius in allround development.

To Get Enrollment throughout India
&
Business Enquiries

Business Opportunity


Building Area
150 to 200 Sq. Ft

Investment
50,000 to 1 Lakh

Investment Return
within 6 months

IQ Kids
Play 'N' Learn...

IQ Kids, No.332 'A', 2nd Floor, Arcot Road, Vadapalani, Chennai - 26
Ph : 044-64543154, 92452 99111 Web: www.iqkidsindia.com
Partner @ Sivakasi, Rajapalayam, Soon @ Karur, Coimbatore, Erode, Nagercoil, Tirunelveli



இரட்டை மகிழ்ச்சி!

சென்னையில் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மாதம் பிரம்மாண்டமான புத்தகக் கண்காட்சி நடைபெறுவதை அறிந்திருப்பீர்கள். இவ்வாண்டு நடைபெற்ற கண்காட்சியில், தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் சார்பாக சிறந்த குழந்தை எழுத்தாளருக்கான அழ.வள்ளியப்பா விருது திரு. ஈ.எஸ்.ஹரிஹரன் (ரேவதி) அவர்களுக்கு வழங்கப்பட்டது. இவர் கோகுலத்தின் முன்னாள் கௌரவ ஆசிரியர். கோகுலத்தில் வைரமணி எஸ்டேட்' உட்பட ஏராளமான குழந்தைப் படைப்புகளை எழுதியவர்; அதற்காக மத்திய, மாநில அரசின் பல்வேறு விருதுகளைப் பெற்றவர். கோகுலம் வெள்ளிவிழா ஆண்டைக் கொண்டாடும் இந்நேரத்தில் அவருக்கு விருது கிடைத்திருப்பது நமக்கெல்லாம் இரட்டிப்பு மகிழ்ச்சி.



“நாங்க யார்



ஹாய் ஃப்ரெண்ட்ஸ்! வெள்ளி விழா ஆண்டில் உங்களைச் சந்திப்பதை நினைக்கும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்த மாதம் கவர் ஸ்டோரி புதுமையாக, அழகாக இருக்க வேண்டும். அதற்கு என்ன செய்யலாமென யோசித்தேன். சில தகவல்களைச் சேகரிப்பதற்காக கோகுலத்தின் முதல் இதழை (பிப்ரவரி 1983) எடுத்துப் புரட்டினேன். அப்போதுதான் ஒரு எண்ணம் உருவானது.

அந்த முதல் இதழ் ஜனவரி 15 பொங்கல் தினத்தின்போது வெளியானது. அதற்காக அட்டையில் ஒரு சிறுவனும், சிறுமியும் கன்றுக் குட்டிக்குப் பொட்டு வைப்பதைப் போல் புகைப்படம் எடுத்து வெளியிட்டு இருந்தார்கள். அந்த இரண்டு பேரையும் இப்போது சந்தித்துப் பேசினால் எப்படி இருக்கும் என்ற எண்ணம் தோன்றியது.

அந்தப் புகைப் படத்தை எடுத்த 'உத்ரா அங்கிளின்' ஸ்டுடியோவுக்குச் சென்று விஷயத்தைச் சொல்லி, ''இவங்க இப்ப எங்கே இருக்காங்கன்னு தெரியுமா அங்கிள்?'' என்று கேட்டேன்.

''ஓ! நல்லா தெரியுமே பிரவீன். இந்தச் சிறுமி நாராயணி, இப்ப பல் டாக்டர். சிறுவன் பிரேம்சாயி,

•அனுஷா, ஹரிஹரன், சுஷ்மா, நாராயணி •



சின்னத்திரை தொடர்களில் நடித்து கொண்டிருக்கும் நடிகர். இவர்களுக்குத் திருமணமாகி இரண்டு இரண்டு குழந்தைகள் இருக்கு'' என்றார்.

நான் எனது யோசனையைச் சொன்னேன். ''இவங்க ரெண்டு பேரையும் சந்திச்சுப் பேசணுமே அங்கிள், ஏற்பாடு செய்யறீங்களா?''

"அதுக்கென்ன பிரவீன். தாராளமா செய்யலாம். நான் அவங்ககிட்டே பேசிட்டு உனக்குத் தகவல் கொடுக்கறேன்'' என்றார்.

சொன்னதைப் போல் ஒரு நாள்

தெரியுமா?"

ஏற்பாடு செய்தார். அவர்களைச் சென்று சந்தித்தேன். கோகுலத்தின் முதல் அட்டையை அவர்களிடம் காட்டினேன். மிகவும் சந்தோஷப்பட்டார்கள். நாராயணியின் 'கஸின் தான்' பிரேம்சாயி.

• நிகிதா, பிரேம்சாயி, சரண், வித்யா

''இருபத்தைந்து வருடங்கள் கழித்து மறுபடியும் எங்களை வந்து பார்ப்பீர்கள் என நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. ரொம்ப சந்தோஷமாக இருக்கு. கோகுலம் வெள்ளிவிழாவைப் போல் பொன் விழா காண வாழ்த்துகள். இவங்க தான் என்னோட பசங்க. அவள் அனுஷா; யு.கே.ஜி. படிக்கிறாள். இவள் சூஷ்மா; ப்ரீகே.ஜி. இவர் என்னோட கணவர் ஹரிஹரன். பிஸினஸ் பண்றார்'' என்று தனது குடும்பத்தை அறிமுகம் செய்தார் நாராயணி.

"ஹாய் அனுஷா. இது யாருன்னு தெரியுதா?'' என்று கோகுலத்தைக் காட்டிக் கேட்டேன்.

"ஓ! நல்லா தெரியுது. என் அம்மா'' என்றாள் அனுஷா.

"அம்மா சின்ன வயசுல அழகா?'' என்று கேட்டார் நாராயணி.

''நீ அழகா இல்லே. கன்னுக்

பிரவீன்





குட்டிதான் அழகா இருக்கு'' என்றாள் சூஷ்மா.

''அனுஷா, சூஷ்மா ரெண்டு பேரும் ரொம்ப நல்லா படிப்பாங்க. நாங்க சொல்ற பேச்சைக் கேட்பாங்க. ரொம்ப சமத்து'' என்றார் ஹரிஹரன்.

''நாங்களும்தான் சமத்து'' என்றார்கள் நிகிதாவும் சரணும்.

இவர்கள் யார் தெரியுமா? அன்று சிறுவனாக கன்றுக் குட்டியைப் பிடித்து நின்றிருக்கும் பிரேம்சாயியின் குழந்தைகள். நிகிதா மூன்றாம் வகுப்பும், சரண் ப்ரீகேஜியும் படிக்கிறார்கள்.

''இந்த போட்டோவை எடுத்த நாள் உங்களுக்கு நினைவிருக்கா?'' என்று கேட்டேன்.

''மறக்க முடியுமா? இந்தக் கன்றுக் குட்டி எங்களுக்குத் தெரிந்த கன்றுக் குட்டிதான். எங்கள் வீட்டுக்கு தினமும் பால் கொடுக்க பால்காரர் பசுவையும் கன்றையும் அழைத்து வருவார். வீட்டு வாசலிலேயே பாலைக் கறந்து தருவார். அப்போது நான் இந்தக் கன்றுடன் விளையாடுவேன்'' என்றார் பிரேம்சாயி.

''அப்புறம் ஏன் பிரேம் அன்று போட்டோ எடுக்கும்போது ரெண்டு பேரும் பயந்தீங்க?'' என்று கலாட்டா செய்தார் உத்ரா அங்கிள்!

• உத்ரா

அந்த அனுபவத்தைப் பற்றி அவர் சொன்னார். பிரேம்சாயி கன்றுக்குட்டியைப் பிடித்துக் கொள்ள ரொம்பவே பயந்தாராம். நாராயணியும் பொட்டெல்லாம் வைக்க மாட்டேன்னு சொல்லிட்டாங்களாம். இரண்டு பேரையும் சமாதானம் செய்து, சுற்றி நான்கைந்து பேர் நின்று கொண்ட பிறகே தைரியமாகச் செய்தார்களாம்.

''நாங்களாக இருந்தால் பயப்படாமல் கன்னுக் குட்டியைப் பிடிச்சிருப்போம். நீங்க பயந்து இருக்கீங்களே! ஷேம்! ஷேம்!'' என்றாள் அனுஷா.

இந்த மாத அட்டையில் நீங்கள் பார்ப்பது பிரேம்சாயியின் குழந்தைகளையும், நாராயணியோட குழந்தைகளையும்தான். ஓகே. ஃப்ரண்ட்ஸ். அடுத்த மாதம் இதே மாதிரி ஒரு சுவையான விஷயத்துடன் சந்திக்கிறேன். பை! பை!



- அட்டையில் இடமிருந்து வலமாக: சரண், சூஷ்மா, நிகிதா, அனுஷா

படங்கள் : உத்ரா

கல்கி நிறுவனத்தில் முப்பத்து மூன்று ஆண்டுகளாக அச்சுப் பிரிவில் பணிபுரியும் சஜ்ஜாத் அவர்கள் கோகுலம் பற்றி சொன்னது:



''இப்போது இருப்பதைப் போல் நவீன வசதிகள் அப்போதில்லை. சித்திரக் கதைகள் கறுப்பு வெள்ளையில் வரும். அவற்றுக்கு 'உபேக்' என்ற திரவத்தை பிரஷ்ஷைக் கொண்டு கவனமாகத் தீட்டி, அச்சில் வண்ணமூட்டச் செய்வோம். குழந்தைகள் ரசிக்கும் வகையில் இருக்க வேண்டுமல்லவா? அதற்காக மிகவும் சிரத்தை எடுத்துச் செய்வோம்'' என்கிறார். இவர்தான் பிப்ரவரி '83 அட்டையின் 'லே-அவுட்' செய்தவர்.



அரிய தகவல்களை அளிக்கும் கோகுலம்!

விழாக்களைக் காணட்டும்!

வெள்ளி விழா ஆண்டில் அடியெடுத்து வைக்கும் 'கோகுலம்' சிறுவர் பத்திரிகைகளில் தனித்துவத்துடனும் சிறப்பாகவும் தொடர்ந்து வெளியாகிப் பொன்விழா, வைர விழா, பவள விழா எனப் பல விழாக்களைக் கொண்டாடட்டும்!

- சின்னஞ்சிறு கோபு
மயிலாடுதுறை

தூண்டுகோல்!

சிவபாக்கியம் முத்துசாமி மெட்ரிக் பள்ளி சுழல் கோப்பையை வென்றதற்கு வாழ்த்துகள். மாணவர்களைப் பாராட்டும் அதே நேரம், அவர்களை ஊக்குவித்துப் படைப்புகளைத் தொகுத்து அனுப்பிய நூலகர் ஆர்.யுவராஜ் அவர்களையும் பாராட்டுகிறோம்!



- ஆர்.கே.கார்த்திக், ஏழாம் வகுப்பு, ஸ்ரீராமகிருஷ்ணா பள்ளி, திசையன்விளை

அருமையான தகவல்!

அரசியலில் ஈடுபடுவோருக்கு ஜார்கண்ட் மாநிலத்தில் ஒரு பள்ளி இருப்பதைத் கோகுலத்தில் படித்து வியந்தேன். இவை போன்ற அரிய தகவல்களை அளிக்கும் தங்களுக்கு நன்றி!

- எல்.ஹரிபால
சுப்பிரமணியம்,
ஆறாம் வகுப்பு,
தேமான்குளம்

நினைவுப் பரிசு!

மரம் வளர்ப்பதன் அவசியத்தை மனத்தில் நன்கு வேரூன்றச் செய்யும் விதமாக 'நினைவுப் பரிசு' சிறுகதை அமைந்தது. தொடர்ந்து இது போன்ற சிறுகதைகளை வெளியிடுங்கள்.

– வி.வேல்முருகன்,
முத்தம்பட்டிகேட்

அனுப்பலாமா?

நான் கள்ளக்குளத்தூர் 'பாரதி நடுநிலைப் பள்ளி'யில் உதவி ஆசிரியையாகப் பணிபுரிகிறேன். எனது பள்ளி மாணவ, மாணவியர்களின் படைப்புகளைத் தொகுத்து அனுப்பினால் வெளியிடுவீர்களா?

– ஏ.சுகந்தி, பாரதி
நடுநிலைப்பள்ளி, கள்ளக்குளத்தூர்

(தாராளமாக அனுப்புங்கள். சிறப்பாக இருந்தால் நிச்சயம் வெளியிடுவோம் – ஆசிரியர்)

அழகே, அமுதே, தமிழே!

ஏர கட்டு!

தமிழரசன் அண்ணாவை உங்களுக்குத் தெரியுமா? கல்லூரியில் படிப்பவர். பெயருக்கு ஏற்றாற் போல் தமிழ் மொழியில் ஆற்றல் உள்ளவர். கண்ணன், பிரியா, ரகுபதி, நந்தினி வசிக்கும் தெருவில்தான் அவரது வீடும் உள்ளது. தமிழில் என்ன சந்தேகம் ஏற்பட்டாலும் அவரிடம் சென்று கேட்பார்கள்.

அன்று அப்படித்தான் நால்வரும் திண்ணையில் அமர்ந்திருந்தார்கள். கண்ணன் கையில் ஏதோ தாள் இருந்தது. நந்தினி என்னமோ சொல்ல, அதற்கு கண்ணன் மறுக்க, அச்சமயம் தமிழரசன் அந்தப் பக்கமாக வந்தார்.

"அதோ நம்ம தமிழ் அண்ணா வர்றார். அவர்கிட்டே கேட்போம்" என்றாள் பிரியா.

தமிழரசன் அவர்களை நெருங்கினார். "என்ன பிரச்னை? ரெண்டு பேரும் ரொம்ப தீவிரமா வாக்குவாதம் செய்யற மாதிரி இருக்கு'' என்று கேட்டார்.

''கண்ணன் ஒரு கதை எழுதி இருக்கான்'' என்றான் ரகுபதி.

''அப்படியா? கதை எப்படி இருக்கு?''

"கதை நல்லாதான் இருக்கு. ஆனா ஆரம்பத்திலேயே பிழை இருக்குன்னு நந்தினி நக்கீரனா மாறிட்டா" என்று கிண்டலடித்தான் ரகுபதி.

"என்ன பிழை?" என்று கேட்டார் தமிழரசன்.

"நீங்களே படிங்க அண்ணா" என்ற நந்தினி, கண்ணனிடமிருந்து வாங்கி அவரிடம் கொடுத்தாள்.

தமிழரசன் கதையின் மேல் பார்வையை ஓட்டினார். 'ஒரு ஊரில் ஒரு குளம் இருந்தது' என்று கதை ஆரம்பித்தது.

" 'ஒரு ஊரில்'னு எழுதியிருக்கறது தப்புதானே?'' என்று கேட்டாள் நந்தினி.

''ஆமாம். ஓர் ஊரில்னுதான் வரணும்" என்றார் தமிழரசன்.

"அப்போ ஒரு குளம் சரியா?" இது கண்ணன்.

"அது சரி. ஒரு, ஓர் இரண்டும் ஒரே பொருளைக் குறிப்பதாக இருந்தாலும் எதை எங்கே பயன்படுத்தணும்னு விதி இருக்கு. உயிர்மெய் எழுத்தில் துவங்கும் சொற்களாக இருந்தால் 'ஒரு' வரும். ஒரு குளம், ஒரு படகு, ஒரு நகரம்... இப்படி சில உதாரணங்கள். அதே சமயம் உயிர் எழுத்தில் ('அ' முதல் 'ஔ' வரை) துவங்கும் சொற்களாக இருந்தால் 'ஓர்' வரும். ஓர் ஏரி, ஓர் ஊர்... இப்படி.''

''குளம் என்றாலும் ஏரி என்றாலும் நீர் நிலையைத்தானே குறிக்குது. அப்புறம் எதற்கு இந்த வேறுபாடு?" என்று கண்ணன் கேட்டான்.

"ஒவ்வொரு மொழிக்கும் சொல் நயம், ஓசை நயம்னு இருக்கில்லே..? அதைச் சரியாப் பயன்படுத்தினால்தான் அழகா இருக்கும். உரை நடைக்கு இந்த விதி முக்கியம். கவிதையில் வேணும்னா இலேசா, அப்பப்போ மாறலாம். உதாரணமா

சா.ஜெயராஜ்

பாரதியார் 'நல்லதோர் வீணை' என்று எழுதியிருக்கார் பாருங்க. இதை இலக்கண அமைதின்னு சொல்றதுண்டு."

"நன்றி, அண்ணா. இனிமே இந்த வார்த்தைகளைச் சரியாப் பயன்படுத்தறோம். கண்ணன் உன் கதையை ஏர கட்டிட்டுக் கிளம்பு" என்றாள் பிரியா.

"பிரியா, நீ இப்ப சொன்ன ஏர கட்டுக்கு என்ன அர்த்தம் தெரியுமா?"

"எடுத்துட்டுக் கிளம்புன்னு அர்த்தம்."

"அந்த வார்த்தை எங்கே இருந்து வந்தது?"

"தெரியலையே" என்றாள் பிரியா.

"கிராமங்களில் வயலை உழுவதற்கு 'ஏர்' என்ற கருவியைப் பயன்படுத்துவது தெரியுமில்லியா? அது இரண்டு பகுதிகளுடைய மரக்கட்டையா இருக்கும். அதை ஆங்கில எழுத்தான 'T' வடிவில் பொருத்தி வயலை உழுவார்கள். வேலை முடிந்ததும் இரண்டையும் ஒன்றாக வைத்துக் கயிற்றால் கட்டுவார்கள். 'ஏரைக் கட்டியாயிற்று. வேலை முடிந்தாயிற்று. இனி கிளம்பலாம்' என்பார்கள். அந்த வார்த்தைதான் இப்போது எல்லா இடங்களிலும் பரவியுள்ளது" என்றார் தமிழரசன்.

"சினிமாவில் கூட ஷூட்டிங் முடிஞ்சதும் 'பேக் அப்'னு சொல்ற மாதிரி!" என்றான் ரகுபதி.

"ஆமாமாம்! இப்போ நான் ஏரக் கட்டிட்டுக் கிளம்பறேன்" என்றார் அண்ணா!



தமிழ் வார்த்தைகளைப் பயன்படுத்துவதில் உங்களுக்கும் சில சந்தேகங்கள் இருக்குமே? தெளிவுபடுத்திக் கொள்ள விரும்பினால் ஓர் அஞ்சலட்டையில் கேள்வியை எழுதியனுப்புங்கள். உங்களுக்குப் பதில் சொல்ல தமிழரசன் அண்ணா தயார். முகவரி:

'கோகுலம் –
தமிழ் அண்ணா'
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடு தாங்கல்,
சென்னை - 32

அறிவியல் தினம்!


மனித வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் முக்கியமான நாள்தான். காரணம் 2007 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல்தேதி போய்விட்டதென்றால், அந்த தினம் மறுபடி வராதில்லையா? ஆனாலும், நாம் ஒவ்வொருவரும் வருடத்தில் சில நாட்களை மிகவும் முக்கியமான நாட்களாக நினைக்கிறோம். அப்படிப்பட்ட முக்கியமான புகழ் பெற்ற தினங்களை இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் நாம் பார்க்கப் போகிறோம்.




* சர்.சி.வி.ராமன்

ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மாதம் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமை, உலக திருமண தினமாகக் கொண்டாடப்படுகிறது. கணவனும், மனைவியும் பல்லாண்டுகள் கூடி வாழ வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் விதமாக "உலக திருமண தினம்' 1981 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்படுகிறது. 1982-ல் அமெரிக்க நாட்டில் உள்ள 43 மாநிலங்களின் கவர்னர்கள் தங்கள் மாநிலத்தில் உலக திருமண நாள் கொண்டாட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். அது இன்று மற்ற நாடுகளுக்கும் பரவி இருக்கிறது.

அமெரிக்காவில், ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி மாதம் மூன்றாம் திங்கட் கிழமை 'ஜனாதிபதி தினமாக' கொண்டாடப் படுகிறது. ஆரம்பகாலத்தில், அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டனின் பிறந்த நாளை அமெரிக்கர்கள் கொண்டாடிவார்கள். பிறகு ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனின் பிறந்த நாளையும் கொண்டாடத் தொடங்கினார்கள். இரண்டுக்கும் இடைவெளி பத்து நாட்கள்தான் என்பதால், ரிச்சர்டு நிக்சன்



• ஆபிரகாம் லிங்கன்



• ஜார்ஜ் வாஷிங்டன்



அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோது இரண்டு விடுமுறை நாட்கள் அவசியமில்லை என்று கூறி, இரண்டையும் இணைத்து, 'ஜனாதிபதி தினமாக' 1971–ஆம் ஆண்டு அறிவித்தார்.

இந்தியாவில் பிப்ரவரி 28ஆம் தேதி 'தேசிய அறிவியல் தினம்' கொண்டாடப்படுகிறது. இந்தத் தேதிக்குரிய முக்கியத்துவம் என்ன தெரியுமா? 1930ஆம் ஆண்டு, இந்த நாளில்தான் இந்தியாவின் புகழ் மிக்க விஞ்ஞானியான சர்.சி.வி.ராமன், தனது பல்லாண்டுகால ஆராய்ச்சியின் பலனாக ராமன் விளைவினைக் கண்டுபிடித்து நோபெல் பரிசினைப் பெற்றார். இந்த தினம், ஒவ்வோர் ஆண்டும் சர்.சி.வி.ராமன், ராமன் விளைவு ஆராய்ச்சியினை மேற்கொண்ட பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கழகத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப் படுகிறது. பல்வேறு பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் 'தேசிய அறிவியல் தினம்' ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

கனடா நாட்டில், ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மூன்றாவது திங்கட்கிழமை பாரம்பரிய தினமாகக் கொண்டாடப்படுகிறது. அன்று விடுமுறை தினம் இல்லை என்றாலும், கனடா நாட்டு மக்கள் தங்களது பழைமை மற்றும் பாரம்பரியத்தை நினைவு கூர்வர்.

நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் அனைத்துக்கும், மத்திய அரசு உற்பத்தி வரி விதிக்கிறது. இவற்றின் மூலமாக ஆண்டுதோறும் அரசுக்குப் பல்லாயிரம் கோடி ரூபாய் வருவாய் கிடைக்கிறது. ஆண்டுதோறும் பிப்ரவரி இருபத்து நான்காம் தேதி, 'மத்திய கலால்(வரி) தினமாகக் கொண்டாடப்படுகிறது. 1944-ஆம் ஆண்டு, இதே தேதியில்தான் மத்திய சென்ட்ரல் எக்சைஸ் வரிச் சட்டம் அமலுக்கு வந்தது. ஆண்டுதோறும் இந்த நாளில் உற்பத்தியாளர்கள், உற்பத்தி வரியினை முறையாகச் செலுத்த வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப் படுகிறது; சாதனை புரிந்த கலால் வரித்துறையினர் கௌரவிக்கப்படுகிறார்கள். ●

எஸ்.சந்திரமௌலி

என் பெயர் தென்றல்!

ஆனந்தி, தென்றல் இருவரும் ஒருவரை ஒருவர் விழுங்கி விடுவதைப் போல் பார்த்துக் கொண்டிருந்தனர். இருவருடைய மனங்களிலும் ஒரே கேள்விதான். இவ எப்படி அச்சு அசல் என்னைப் போலவே இருக்கா?

அதே உயரம், அதே நிறம். கண்கள் கூட ஒரே மாதிரியாக இருந்தன. தென்றல் தலையை வாராமல் அப்படியே விட்டிருந்தாள். ஆனந்தி குதிரைவால் போட்டிருந்தாள். இந்த ஒரே ஒரு வித்தியாசம்தான்.

முதலில் சுதாரித்துக் கொண்டது ஆனந்திதான்.

"நீ...நீ...யாரு? எப்படி என்னை மாதிரியே இருக்கே?"

"எனக்கும் தெரியலே." என்றாள் ஆனந்தி.

"இரண்டு பேரும் உள்ளே வாங்க; நிதானமாப் பேசலாம்" என்றார் தாத்தா!

மூன்று பேரும் வீட்டின் முன் பக்கத்துக்கு வந்தார்கள். தாத்தா கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து கொண்டார். எதிரே இருந்த புல்வெளியில் ஆனந்தியும் தென்றலும் அமர்ந்து கொண்டனர். இருவரும் இன்னமும் கையைப் பிடித்துக் கொண்டுதான் இருந்தார்கள்.

"என்னால நம்பவே முடியலை. சினிமாவுலதான் இந்த மாதிரி டபுள் ஆக்ஷன் எல்லாம் பார்த்திருக்கேன்" என்றாள் ஆனந்தி.

"நீ சினிமா படமெல்லாம் பார்த்திருக்கியா?" என்று கேட்டாள் தென்றல்.

"ஓ, நிறைய பார்த்திருக்கேனே!"

தாத்தாவுக்கும் ஒரே ஆச்சரியம். "அம்மாடி, என் வாழ்நாள்ல இப்படி ஒரு அதிசயத்தை நான் பார்த்தது கிடையாது" என்றார்.

ஆனந்தியை ஒரு முறை தொட்டுப் பார்க்க வேண்டும் போல் இருந்தது தென்றலுக்கு. மெதுவாக, அவளுடைய கையைப் பிடித்தாள். தென்றலின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டாள் ஆனந்தி. மீண்டும் மீண்டும் பார்த்துக் கொண்டார்களே தவிர என்ன பேசுவது என்று இருவருக்கும் தெரியவில்லை.

மருதன்

"நான் பார்த்ததேயில்லை."

ஆனந்திக்கு ஆச்சரியமாக இருந்தது. "ஏன் இந்த ஊர்ல தியேட்டரே இல்லையா?"

"ம்ஹூம்."

"டீவி?"

"அப்படி ஒண்ணு இருக்கும்னு தெரியும். ஆனா பார்த்ததில்லை."

"அட! டிவியே பார்த்ததில்லையா? ரொம்ப ஆச்சரியமா இருக்கே!"

"சரி, வா. உன்கிட்ட நிறைய பேசணும். நாம காட்டுக்குப் போகலாம்" என்றாள் தென்றல்.

"ஓயெஸ். இது வரைக்கும் நான் காட்டுப் பகுதிக்குப் போனதே



யில்லை'' என்றபடி எழுந்தாள் ஆனந்தி.

இருவரும் தாத்தாவிடம் சொல்லி விட்டு கையைக் கோத்துக் கொண்டு ஓடினார்கள்.

"நான் வழக்கமா ஊஞ்சல் ஆடற மரத்துக்குக் கூட்டிக்கிட்டுப் போறேன் வா" என்றாள் தென்றல். ஓடியதில் ஆனந்திக்கு மூச்சிறைத்தது. ஆனால் உற்சாகம் குறையவில்லை.

ஒரு பெரிய புளிய மரத்துக்கு அருகே இருவரும் வந்தனர்.

"ம், முதல்ல நீ ஏறி உட்காரு"

என்றாள் தென்றல்.

ஆனந்தி இதுவரை ஊஞ்சல் ஆடியதில்லை. தக்கையாக இருக்கும் அந்தப் பலகையைப் பார்த்ததும் அவளுக்கு பயம் வந்து விட்டது. உடைந்து விழுந்து விட்டால்? கயிறு வேறு மெலிதாக இருந்தது.

தென்றல் சிரித்தாள். "என்ன... பயமா இருக்கா?"

ஆனந்தி தலையசைத்தாள்.

"அப்ப முதல்ல நான் ஆடறேன். என்னைப் பாரு."



தாவிச் சென்று அந்தப் பலகையில் ஏறிய தென்றல் கால்களை நீட்டி முன்னும் பின்னும் ஆட ஆரம்பித்தாள். ஆனந்தி அவளுக்குப் பின்னால் ஓடிச் சென்று கயிற்றைப் பிடித்து ஆட்டிவிட்டாள்.

ஐந்து நிமிடங்கள் கூட ஆகியிருக்காது.

"ஏய் தென்றல், நானும் ஆடறேனே" என்று கெஞ்சினாள் ஆனந்தி.

பலகையில் ஏறி உட்காரும் வரைக்கும்தான் பயமாக இருந்தது. பிறகு உற்சாகம் அதிகமாக, தனது குதிரை வால் கொண்டையைக் கழற்றி விட்டு தலைமுடியை காற்றில் பறக்க விட்டாள். இத்தனை சந்தோஷமாக இதுவரை விளையாடியதே இல்லை என்று தோன்றியது அவளுக்கு.

பிறகு இருவரும் நடக்க ஆரம்பித்தனர். வழியில் நின்று, சில கொய்யாப் பழங்களையும், முந்திரிப் பழங்களையும் சேகரிக்க ஆரம்பித்தாள் தென்றல். இருவருடைய கைகளும் நிறைந்த பிறகு, அருகில் இருக்கும் குளக்கரைக்குச் சென்றனர்.

"நீ இன்னும் ஸ்கூலுக்குப் போக ஆரம்பிக்கலையா?"
"ம்ஹூம்! எங்களுக்கு எழுத, படிக்க எல்லாம் தெரியாது."

ஆனந்திக்கு நிறைய சந்தேகங்கள் இருந்தன. "காட்டில் சிங்கம் இருக்குமா? புலி, கரடி இருக்குமா? காட்டுக்கு இவ்வளவு பக்கத்தில் வீடு கட்டியிருக்கிறீர்களே, உனக்கும் தாத்தாவுக்கும் பயமாக இருக்காதா? ராத்திரி எப்படி, எங்கே தூங்குவீர்கள்?

எல்லாக் கேள்விகளுக்கும் தென்றல் நிதானமாக பதில் சொன்னாள். அடுத்து, தென்றலின் முறை.

"உங்க வீட்டுல டீவி. இருக்கா? அதுல என்னென்ன தெரியும்? ஆங்கிலம் தெரிஞ்சாதான் டீவி பார்க்க முடியுமா? ஸ்கூல்ல என்னென்ன சொல்லிக் கொடுப்பாங்க? அடிப்பாங்களா? பஸ், ட்ரெயின் எல்லாம் வேகமா போகுமா? உனக்கு பயமா



"நீ இன்னும் ஸ்கூலுக்குப் போக ஆரம்பிக்கலையா?"

"ம்ஹூம்! எங்களுக்கு எழுத, படிக்க எல்லாம் தெரியாது."

சிறிது நேரம் எதுவும் பேசிக் கொள்ளாமல் நடந்தார்கள்.

"எனக்கு இந்தக் காட்டுலயே தங்கிடணும் போல இருக்கு, தென்றல். இங்க இருக்கிற எல்லாமே எனக்குப் பிடிச்சிருக்கு."

"இந்தக் காட்டுல இருக்கிறது எனக்கும் ரொம்பப் பிடிச்சிருக்கு. ஆனா, எனக்கு ஒரு ஆசை..."

"என்ன?"

"ஒரே ஒரு முறை உங்க ஊருக்கு வந்து பார்க்கணும். டீ.வி., சினிமா, பஸ், ட்ரெயின், ஸ்கூல் எல்லாத்தையும் பார்க்கணும்."

திடீரென்று ஆனந்திக்கு ஒரு யோசனை தோன்றியது.

இருக்காதா?"

தென்றல் கேட்கும் கேள்விகளைக் கேட்டு ஆனந்திக்கு ஆச்சரியமாக இருந்தது.

(தொடரும்)

புதுமைப் போட்டி பரிசு கூப்பன்

புதுமைப் போட்டி	நான் கையொப்பமிட்டுக் கோகுலம் போஸ்டரைக் கொடுத்த...
என் பெயர் :	நண்பர் பெயர் : ....
வகுப்பு :	வகுப்பு : ....
பள்ளி :	பள்ளி : ....
வீட்டு முகவரி :	வீட்டு முகவரி : ....
தொலைபேசி (or) E-mail:	தொலைபேசி (or) E-mail: ....
	எனது கையொப்பம் : ....

சிரிப்பலை





ராமு

"அஞ்சும் அஞ்சும் எத்தனைடா?"

"பத்துடா சோமு."

"போடா... நான் இருபதுன்னு சொன்னதுக்கே டீச்சர் தப்புன்னாங்க. இன்னும் குறைச்சுச் சொன்னா அவ்வளவுதான்."

"ஆங்கில மாசத்துல் பொய் பேசற மாசம் எதுன்னு தெரியுமா சோமு?"

"ஓ! ஜூலை 'Lie' மாசம்தான்!"

- அனுராதா ராஜப்பா,
வத்தலக்குண்டு

"என்னடா ராமு, கால்லே 'மாவுக்' கட்டு?"

"'தோசைக்'கல் விழுந்து அடி பட்டுடுச்சுடா' சோமு!"

- அனன்யா,
பெங்களூர்



சோமு

"நான் இந்தக் கணக்கை ஆறு தடவை செய்து பார்த்தேன், ராமு."

"சரி."

"ஆறு விடைகள் வந்திருக்கு... எது சரின்னு பார்த்துச் சொல்லுடா..."

- சரவணன்,
வீரணம்


ஜில்லி ஜாலி
கதை: நக்கீரன், படம் : தர்மா
அந்த அணில்கள் கூட்டத்தில் ஜில்லிதான் மிகவும் இளையவன்...
வெளியூருக்குப் போயிருந்த ஜானி வந்துட்டானாம்!
அடக் கடவுளே!
யார் அது ஜானி?
நம்மைப் போன்ற சிறு விலங்குகளை வேட்டையாடி விற்பவன்.
பயப்படாதீங்க. நான் ஒரு யோசனை சொல்றேன்.
அவனுக்குச் சரியான பாடம் கற்பிப்போம்.
எப்படின்னு சொல்லு ஜில்லி!
அவனிடம் நீளமான களுக்கி இருக்கு. மரத்தின் கீழே நின்றபடி...
...நம் உடலில் குத்தி வேட்டையாடுவான்.


மரத்தைச் சுற்றி முட்களைப் போட்டு, இலைகளால் மூடுவோம்...
நல்ல யோசனை
ஜில்லியின் யோசனைப்படி முட்களை ஒடித்து எடுத்து...
... தாங்கள் இருந்த மரத்தைச் சுற்றிப் போட்டன.
இனி பாருங்க வேடிக்கையை!
சீக்கிரம், ஜானி வர்றான்.
ஆகா! எவ்வளவு அணில்கள்! இன்றைக்கு எனக்குச் சரியான வேட்டை...


ஜானி சுளுக்கியுடன் மரத்தை நெருங்க, முட்கள் கால்களில் தைத்தன.
ஆ!... அம்மா...
என்ன அண்ணே, எப்படி இருக்கீங்க?
காலில் சாதாரண முட்கள் குத்தியதற்கே துடிக்கிறீர்களே, எங்களைச் சுளுக்கியால் குத்தும்போது எப்படி வலிக்கும்?
முட்களைப் போட்டதுக்கு மன்னிச்சுடுங்க. உங் களைத் திருத்தத்தான் இப்படிச் செய்தோம்.
ஜானி வெட்கி, தலை கவிழ்ந்து சென்றான்.

● **ஆர். செல்வரத்தினம்,**
புறங்காடு

? நான் ஐஸ்கிரீம் போன்ற குளிர்ச்சியான பொருள்களைச் சாப்பிட்டால் என் முகத்தில் பருக்கள் வந்துவிடுகின்றன. இதை எப்படித் தடுப்பது?



! சாக்லேட், ஐஸ்கிரீம், எண்ணெய் மற்றும் இனிப்புப் பண்டங்கள், மாமிச உணவுகள் போன்றவற்றை அதிகமாகச் சாப்பிட்டால், முகத்தில் உள்ள எண்ணெய்ச் சுரப்பிகளில் 'சீபம்' (Sebum) அதிகமாகச் சுரக்கும். இதனால் முகத்தில் பருக்கள் வரும். இவற்றுக்குப் பதிலாக, பழங்கள், காய்கறிகள், கீரைகள் போன்றவற்றை அடிக்கடி சாப்பிட்டால் முகப்பருக்கள் வருவது குறையும். மேலும் அதிகமாகத் தண்ணீர் குடிப்பதும் பருக்களைத் தடுக்க உதவும். தினமும் குறைந்தது நான்கு முறையாவது முகத்தைச் சோப்பு போட்டுக் கழுவவும்.

விக்...விக்...



● **ஆர்.நல்லசிவம், கோவை**

? தீக்காயங்களுக்குச் செய்ய வேண்டிய முதலுதவி என்ன?

! சாதாரண தீக்காயம் என்றால் தீக்காயம் பட்ட இடத்தைப் பத்து நிமிடங்களுக்குக் குளிர்ந்த நீரில் நனைக்கலாம், அல்லது குளிர்ந்த நீரில் நனைத்த துணியைக் காயத்தின் மீது கட்டலாம். பின்பு 'சில்வெரெக்ஸ்' மருந்தைத் தடவலாம். உடைகளில் தீ பற்றியிருந்தால் தண்ணீரைக் கொட்டித் தீயை அணைக்க வேண்டும் அல்லது கம்பளி, போர்வை, கனத்த திரைச் சீலை போன்றவற்றால் உடலைச் சுற்றி மூடி, தீயை அணைக்க வேண்டும். பெரிய தீக்காயங்களின் மீது தண்ணீரைத் தெளித்துச் சூட்டைக் குறைப்பது நல்லது. திறந்திருக்கும் தீக்காயங்களைச் சுத்தமான துணியால் மூட வேண்டும். இதன் மூலம் காயங்களில்





விக்கலே!

தொற்றுக்கிருமிகள் தாக்காமல் பாது காக்கலாம்.

● ப. அலமேலு, தென்காசி

? நான் முன்பே டைபாய்டு காய்ச்சலுக்குத் தடுப்பூசி போட்டுக் கொண்டேன். என்றாலும் போன மாதம் எனக்கு டைபாய்டு காய்ச்சல் வந்துவிட்டது. ஏன் டாக்டர்?

! டைபாய்டுக்கான தடுப்பூசி அதிக பட்சமாக மூன்று வருடங்களுக்கு மட்டுமே பாதுகாப்பு தரும். ஆகவே, மூன்று வருடங்களுக்கு ஒரு முறை டைபாய்டு தடுப்பூசியைப் போட்டுக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் டைபாய்டு காய்ச்சல் மீண்டும் வருவதற்கு வாய்ப்புண்டு. குடிநீரை நன்றாகக் காய்ச்சி ஆறவைத்துக் குடிப்பதன் மூலமும், ஈக்கள் மொய்க்காமல் பாதுகாக்கப்பட்ட உணவுகளை உண்பதன் மூலமும் டைபாய்ட் வருவதைத் தடுக்கலாம்.

● கனகசபாபதி, கமுதி

? விக்கல் வருவது ஏன்? விக்கலை நிறுத்த என்ன செய்வது டாக்டர்?

! நம் வயிற்றில் நெஞ்சுப் பகுதியையும், வயிற்றுப் பகுதியையும் 'உதரவிதானம்' எனும் சவ்வு பிரிக்கிறது. இந்தப் பகுதியில் உள்ள நரம்புகள் ஏதேனும் ஒரு காரணத்தால் தூண்டப்பட்டால் உதரவிதானம் அவ்வப்போது தன்னிச்சையாகச் சுருங்கும். இதனால் விக்கல் வருகிறது. ரத்தத்தில் உள்ள கரியமில வாயுவின் அளவை அதிகரித்தால் பெரும்பாலும் விக்கல் நின்றுவிடும். இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்: மூச்சை நன்றாக இழுத்து அடக்கிக் கொள்ள வேண்டும். 20 எண்ணும் வரை மூச்சை வெளியே விடவேண்டாம். பின்னர் விட்டுவிடவும். இப்படி ஐந்து முறை செய்தால் ரத்தத்தில் கரியமில வாயு அளவு அதிகமாகி விக்கல் நின்றுவிடும்.

தகவல் பெட்டி!

- சி.டி.ஸ்கேன் கருவியைக் கண்டுபிடித்தவர் இங்கிலாந்து பொறியாளர் ஹெளன்ஸ் ஃபீல்ட்.
- மனித ரத்தப்பிரிவுகளில் மிக அரிதான ரத்தப்பிரிவு, 'பாம்பே-ஓ'.
- தலைமுடி பற்றிய மருத்துவப் படிப்பிற்கு 'டிரைக்காலஜி' (Trichology) என்று பெயர்.
- பத்து வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகள் பல் துலக்குவதற்கு மென்மையான (Soft) பல் துலக்கிகளையே பயன்படுத்த வேண்டும்.
- வெள்ளைப்பூண்டில் உள்ள 'ஆலிசின்' எனும் வேதிப் பொருளுக்கு நோய்க் கிருமிகளைக் கொல்லும் ஆற்றல் உள்ளது.

டாக்டர் கு. கணேசன்

நேற்றைய உலகம் - 4

சீன நாகரிகத்தை மஞ்சளாற்று நாகரிகம் என்று குறிப்பிடுகின்றனர். மற்ற நாகரிகங்களின் எச்சங்களே இன்று மிஞ்சி நிற்கின்றன. ஆனால், சீன நாகரிகம் ஒன்றுமட்டும்தான், அழிவுறாமல், இன்றுவரை பெருமையைத் தக்கவைத்துள்ளது. சீனப் புராணப்படி, 'பாங்கூ' என்பவர்தான், சீன நாகரிகத்தைத் தொடங்கினார் என்றும், அதன் பின், 'சாகே' பேரரசர்கள் தொடர்ந்து ஆட்சி செய்தனர் என்றும் கூறப்படுகிறது. இச் செய்திகளைப் பற்றி, சுமார் 4000 ஆண்டுகட்குமுன் எழுதப்பட்ட பதிவுகள் நமக்குச் சொல்கின்றன.

'சீனா' என்ற பெயர், அங்கு ஆண்ட 'சின்' என்ற மன்னரைக் குறிப்பதற்காக அந்நிய நாடுகளால் சூட்டப்பட்டதாகும்.

கி.பி.1994-ல், 4.5 கோடி வருடங்களுக்கு முன் வாழ்ந்த மனிதக் குரங்கின் புதை படிமம் சீனாவில் கிடைத்துள்ளது. 75 லட்சம் வயதுள்ள 'லண்டியன் மனிதன்', 6 லட்சம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த 'பீகிங் மனிதன்' என வியப்பூட்டும் பழைய படிமங்கள் கிடைத்துள்ளன. அதை விடப் பழைமையாக, சீனக் குகையான ஜுவாகௌடியனில் கிடைத்தவை 5.5. - 2.5 லட்சம் வயதுள்ள மனித படிமங்களும், 1.7 கோடி வயதுடைய 'யுவாங்குமாஷ்' என்ற மனித புதைபடிமம். இவையே முதல் நிமிர்ந்த மனிதன் என்கிறார்கள்.

நாம் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் 'ஹோலோசீன்' (Holocene) காலம் துவங்கியது சுமார் கி.மு.10,000–ஆம் ஆண்டுகளில்தான்!

• ஜியா வம்சத்தின் அரசர்





வியக்க வைக்கும்



சீனர்கள்!

மனித இனத்தின் வாழ்க்கை முறையை, வேட்டையாடலிலிருந்து பிரித்து, புரட்சிகரமாக மாற்றியமைத்த விவசாய முறை பழக்கமானதும் இதே காலத்தில்தான். விவசாயம் தோன்றியவுடன் அதன் இணையாகப் பிறந்ததுதான் தந்தை வழி சமுதாயம். கி.மு.5000 - 3000 வரை பழங்கால 'சீன நாகரிகம்' 'யாங் ஷாவோ' (Yang Shaoo) என்ற பெயரில் மேற்கு சீனாவில் வளர்ந்தது. ஷான்சி, ஷென்சி, ஹோனன் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் புதிய கற்கால மக்கள் எனப்பட்டனர். இவர்கள் காடுகளைச் சீரமைத்து விவசாய நிலங்களை உண்டாக்கினர். ஆனால் ஓரிடத்தில் நிலையாகத் தங்கி, கிராமத்து வாழ்க்கை வாழவில்லை; ஆங்காங்கே நாய், பன்றி, ஆடு, மாடுகளுடன் நகர்ந்து, வழியில் கம்பு, குச்சி, மரத்துண்டுகளின் மேல் இலை, தழை போட்டு தங்குமிடம் உருவாக்கினர். உணவுக்கு வேட்டையாடுதலையும், மீன் பிடித்தலையும் தொடர்ந்தனர்.



• சீன எழுத்துகள்

காலப்போக்கில், கிராமங்கள் அமைத்தனர்; நகரங்களும் 'ட' வடிவ தெருக்களுடன் உருவெடுத்தன. மக்களிடையே ஆள்பவர்கள், ஆளப்படுபவர்கள் என்ற பிரிவுகளும் பிறந்தன. கி.மு.3000களிலேயே, 'ஜியா' வம்சத்தாரால், அடிமைச் சமுதாயமும் உண்டானது.

கி.மு. 8000-களிலேயே சீனர்கள் சக்கரம் இன்றியே பானைகள் செய்தனராம்! வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுள் ஒன்றான, 'ஜியாங்கசி'யில், சீன நாகரிகப் பானைகள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. மரத்தால் 'பிரஷ்' உருவாக்கி, அதைக் கொண்டு, பானைகட்கு வண்ணம் தீட்டினராம். மஞ்சளாற்றுப் படுகைகட்கு அருகில், நிறைய நீல வண்ணப் பானைகள் கிடைத்துள்ளன. சில பானைகளில் சிவப்பு, நீலம், வெண்மை வண்ணம் பூசப்பட்டு, படங்களும் வரையப்பட்டுள்ளனவாம்.

சீன எழுத்து மற்ற உலக மொழிகளிலிருந்து வேறுபட்டது. 'சொல் அச்சு' முறையிலான எழுத்துக்களை உருவாக்கியவர்கள் சீனர்களே! இதில் 'எழுத்தும் படமும்' இணைந்தே இருக்கும்! ஜப்பானியர்களும், இதே எழுத்தினைக் கொஞ்சம் மாற்றிப் பயன்படுத்துகிறார்கள். மிகக் குறைந்த கொரியர்களும், வியட்நாமியர்களும் இம்முறையைப் பின்பற்றுகின்றனர். இதில் 80,000 எழுத்துகள் உண்டு! அக்காலச் சீனமக்கள் அவ்வெழுத்துகளை மரத்தில் செதுக்கி, அதில் மை ஊற்றி,

ஸ்வாதி

அப்படியே பேப்பரில் பதித்து... அச்செடுத்து எழுதினராம். கி.மு.4500-களிலேயே பித்தளையாலான ஆயுதங்கள், கருவிகளைப் பயன்படுத்தினர். பின் இந் நாகரிகம் தென்கிழக்குப்



• அபாகஸ்...

பகுதிகளில் பரவியது. சீனாவில் பித்தளை, தாமிரப் பாத்திரங்கள் பயன்பாட்டுக்கு வந்து, உலோகவியல் வளர்ந்தது. இதனை ஒட்டி, தாமிர, பித்தளையிலிருந்து, தங்கம் உருவாக்கும் 'ரசவாதமும்' பிறப்பெடுத்தது.

சீன நாகரிகம் என்பது அந்தக் காலகட்டத்திலேயே 'மக்கள் தொகை மிகுந்த நாகரிகம்!

பிணிதீர்க்கும் மருந்தை அவர்களின் பாரம்பரிய முறையில் கண்டுபிடித்தனர். அதுவே சீன மருத்துவம், யுனானி மருத்துவம் என்றெல்லாம் பெயர்பெற்றது. பிறகு, உடலின் குறிப்பிட்ட பகுதிகளில் ஊசிகளைக் குத்தி, அதன்மூலம் வலி, நோய் போக்கும், 'அக்குபங்ச்சர்' முறையை உருவாக்கியதும் சீனர்களே.



• அக்குபங்ச்சர்

மஞ்சளாற்றுப் பேரரசர்தான், உலகின் முதல் திசைகாட்டியைக் கண்டுபிடித்தாராம்! அதன் மூலம், அவரது எதிரியான 'சியு'வைத் தோற்கடித்தாராம்! அதுமட்டுமல்ல, மஞ்சளாற்றுப் பேரரசரின் மனைவியான 'லீய்சூ'தான், கி.மு.2650-ல், ஓய்வெடுக்க, தோட்டத்தில் அமர்ந்துள்ளபோது, 'பட்டுப்பூச்சி' கூடு கட்டும் அழகைக் கண்டார். அதன் பிறகு பட்டாடை பிறந்தது. பட்டு தயாரிப்பை ரகசியமாகவே காப்பாற்றி வந்தனர். பட்டு வளர்ப்பு பற்றிச் சொன்னாலோ, பட்டுப் பூச்சியை சீனாவிலிருந்து வெளி நாட்டுக்கு கொண்டு சென்றாலோ மரண தண்டனைதான்!

இவர்கள் ஆமை ஓட்டில், 'கணக்குகளை' எழுதினர். எண்ணும் பலகை (Abacus), துப்பாக்கி மருந்து, தட்டச்சு, காகிதம் போன்றவற்றை உலகுக்குத் தந்தவர்கள் சீனர்களே. அவர்கட்கென்றே நாட்காட்டியையும், வானவில் பதிவுகளையும் கூட சீனர்கள் வைத்துள்ளனர். வால் நட்சத்திரங்கள், சூரியப் புள்ளிகள், புதிய விண்மீன்கள் என சீனர்களின் கண்டுபிடிப்புகள் தொடர்ந்து, நம்மை விழி விரிய வைக்கின்றன!

• சீன அரசர்களின் சிலைகள்...



காட்டுக்குப் போன வெள்ளையன்!

பி.எஸ். ஜேம்ஸ்





ஆடு மேய்க்கும் சின்னான் தினமும் ஆடுகளை மலையடிவாரத்துக்கு ஓட்டி வருவான். ஆடுகளை மேய விட்டு மரத்தடியில் தூங்கி விடுவான்.

சற்று நேரம் புற்களை மேயும் ஆடுகள் பிறகு ஆங்காங்கே கூடிப் பேசிக் கொள்ளும். அந்தக் கூட்டத்தில் வெள்ளையன் என்ற ஆடு இருந்தது. அதற்கு நீண்ட நாட்களாகவே ஓர் ஆசை.

"எத்தனை நாட்களுக்குதான் இதே இடத்தில் ஒரே மாதிரியானப் புற்களையே சாப்பிடுவது? காட்டுக்குள் சென்றால் விதவிதமான இலைகள், கொடிகளைச் சாப்பிடலாமல்லவா?" என்று சொல்லும்.

ஒருநாள் வழக்கம் போல் புற்களை மேய்ந்து கொண்டிருக்கையில் அந்தப் பக்கமாக மான் ஒன்று வந்தது. அதைக் கண்டதும், வெள்ளையன் அருகே சென்று பேச்சுக் கொடுத்தது.

"மான் அண்ணே! நீங்க காட்டுக்குள்ளிருந்தா வர்றீங்க?"

"ஆமாம்."

"அங்கே சாப்பிடுவதற்கு விதவிதமான இலைகள் கிடைக்குமா?"

"நல்லா கேட்டே! செழுமையான இலைகள், சோளம், கிழங்குகள் எல்லாம் இருக்கு. சுவையான அருவித் தண்ணீர் கிடைக்கும். இஷ்டம் போல் சாப்பிடலாம். எங்கே வேணும்னாலும் போகலாம்" என்றது மான்.

"அப்படின்னா நானும்

உங்களோடு காட்டுக்கு வரட்டுமா?"

"ஓ! தாராளமா வாயேன். எனக்கும் ஒரு புது நண்பன் கிடைச்ச மாதிரி இருக்கும். காட்டு வாழ்க்கை உனக்கும் புது அனுபவமா இருக்கும்" என்றது மான்.

இதைக் கேட்ட மற்ற ஆடுகள் வெள்ளையனைப் போக வேண்டா மெனத் தடுத்தன. ஆனால் வெள்ளை யன் கேட்கவில்லை.

"இந்த வறண்ட புற்களையே எத் தனை நாட்களுக்குத்தான் சாப்பிட்டுக் கொண்டிருப்பது? என்னைத் தடுக் காதீர்கள். நான் முடிவு செய்து விட் டேன்" என்ற வெள்ளையன் மானு டன் கிளம்பியது.

காட்டுக்குள் செல்லச் செல்ல வெள்ளையனுக்குக் குஷியாகி விட் டது. எங்கு பார்த்தாலும் பசுமை யான மரங்கள், செடிகள், கொடி வகைகள். இதுவரை பார்த்திராத பூக்கள்!

"ஆகா! இப்படியோர் இடத்தை இத்தனை நாட்களாகப் பார்க்காமல் போனோமே! மானே உனக்கு நன்றி!" என்றது.

ஆனந்தத்தில் அங்கும் இங்குமாக ஓடியது. இஷ்டம் போல் இலை, தழை களைத் தின்றது.

"போதும்! இருட்டிப் போச்சு. வா, என் வீட்டுக்குப் போவோம்" என்ற மான், வெள்ளையனை ஒரு குகைக்கு அழைத்துச் சென்றது.

"இதுதான் என்னோட வீடு. நீயும் இங்கேயே தங்கிக்க" என்றது.

மறுநாள் காலை இரண்டும் குளிப் பதற்காக ஆற்றங்கரைக்குச் சென்றன. வெள்ளையன் தண்ணீரில் மூழ்கி மூழ்கி எழுந்தது. சந்தோஷமாகப் பாட்டு பாடியது. "ஊரில் இருக்கும் போது எஜமான் எப்போது குளிப் பாட்டி விடுகிறாரோ அப்போதுதான் குளிக்க முடியும். அதிலும் எல்லோ ரையும் ஒன்றாக நிற்க வைத்து குழாய் மூலம் தண்ணீரைப் பீய்ச்சி அடிப் பார்கள். இங்கே தனியாகக் குளிப்பது பன்னீரில் குளிப்பது போல் இருக் கிறது" என்றது.

அப்போது 'கிர்...கிர்' என்றொரு சத் தம். வெள்ளையனும் மானும் திரும் பிப் பார்த்தன. அங்கே ஒரு சிறுத்தை இவர்களை முறைத்துப் பார்த்தபடி பாய்ந்து வந்தது.

"வெள்ளையா! வா ஓடி விடலாம்" என்ற மான் ஓட்டம் பிடித்தது.

வெள்ளையன் முதலில் செய்வதறி யாது திகைத்தாலும், பிறகு மானைப்



பின் தொடர்ந்து ஓடியது. சிறுத்தை விடாமல் துரத்த, எப்படியோ தப்பித்து குகையை அடைந்தன.

பாவம்! வெள்ளையனுக்கு மூச்சி ரைத்தது. "யார் அது எதற்காக நம்மைத் துரத்தியது?" என்று கேட்டது.

"அதுதான் சிறுத்தை. நம்மை அடித்துத் தின்பதற்காகத் துரத்தியது. இந்தச் சிறுத்தையைப் போல சில இருக்கின்றன. அவை அப்படித்தான் துரத்தும்" என்றது.

"ஐயோ! அப்படியானால் அடிக்கடி உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓட வேண்டுமா? சந்தோஷமாக இருக்கலாம் என்றல்லவா வந்தேன்!" என்றது வெள்ளையன்.

"இந்த மாதிரி நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் நான் சந்தோஷமாகத்தான் இருக்கிறேன். எந்த ஒரு வாழ்க்கையிலும் சந்தோஷம் ஒரு பக்கம் இருந்தால், இதைப் போன்ற பிரச்னையும் இருக்கத்தான் செய்யும். அந்தப் பிரச்னையை எப்படிச் சமாளிப்பது என்று தெரிந்து கொண்டால் போதும்" என்றது.

"நீ சொல்வதும் சரிதான். நீ பிறந்தது முதலே இங்கு இருக்கிறாய்; அதனால் ஆபத்து வந்தால் ஓட முடியும். என்னால் ஒவ்வொரு முறையும் இப்படி ஓட முடியாது. எனது முந்தைய வாழ்க்கையில் இஷ்டம் போல் சுற்றும் சுதந்திரம் இல்லாவிட்டாலும் பாதுகாப்பு இருந்தது. என் எஜமானை மீறி யாரும் எங்களை நெருங்க முடியாது. ஆகவே நான் மீண்டும் ஊருக்கே சென்று விடுகிறேன்" என்றது வெள்ளையன்.

"அதுவும் சரி. இருக்கும் இடத்திலேயே சந்தோஷமாக இருப்பது தான் புத்திசாலித்தனம். போய் வா. ஒருநாள் என்னுடைய விருந்தாளியாக இங்கே வந்ததற்கு நன்றி!" என்றது மான்.

வெள்ளையன் விடைபெற்றுக் கிளம்பியது.

1000/- ரூபாய்



பரிசுப் போட்டி முடிவு

கோகுலம் வாசகர்களா, கொக்கா? எவ்வளவு நுணுக்கமான போட்டியை வைத்தாலும் சரியான விடைகளை எழுதி அசத்தி விடுகிறீர்கள்! டிசம்பர் மாதம் போட்டியில் கலந்து கொண்டவர்களில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் சரியான விடையை எழுதியிருந்தீர்கள். ஆகவே குலுக்கல் மூலம் ஐந்து பேர் தேர்வு செய்யப்பட்டு ரூ.**200/-** வீதம் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படுகிறது.

சரியான விடைகள்:

1. செஸ் 2. கேரம் போர்டு
3. கூடைப் பந்து
4. டேபிள் டென்னிஸ்
5. ஸ்நூக்கர் (அ) பில்லியர்ட்ஸ்

பரிசு பெறுவோர்:

1. நா.ஜனார்த்தனம், ஒன்பதாம் வகுப்பு, நம்பியூர்
2. மோனலிசா எடின்பரோ, ஏழாம் வகுப்பு, மும்பை
3. ச.கனகசுப்புலட்சுமி, எட்டாம் வகுப்பு, திருநெல்வேலி
4. எஸ்.தங்கராஜ், குரோம்பேட்டை, சென்னை
5. எம்.அனிஸா பேகம், ஏழாம் வகுப்பு, கோபிசெட்டிபாளையம்


பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துக்கள். கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் நன்றி!

6

கதை : வாண்டுதாசன்
படம் : பிள்ளை




இப்பவே பல பாதிப்புகள். பருவ காலத்தில் மழை இல்லை. கடுமையான வெயில்! வறட்சி. இதுக்கெல்லாம் காரணம் என்ன?
வலுவான ஓர் இனம் பெருகும்போது வலுவற்ற இனம் அழிஞ்சுதான் போகும். அதுக்கு என்ன செய்யறது?
இயற்கையை எதிர்த்துப் பெருகும் எந்த இனமும் விரைவிலே அழிஞ்சுடும், அல்லது பல்வேறு சோதனைகளைச் சந்திக்கும்.
அப்படின்னா நாங்க அழிஞ்சு போய்டுவோமா?
தேவைகளைக் குறைச்சு இயற்கையை கவனிச்சு அதோட போக்குலயே நாமும் வாழணும். அப்படிச் செய்தா எல்லா இனங் களும் நல்லா இருக்க லாம்.
இன்றைக்கு உங்களுக்கு வலிமை இருக்குன்னு அழிச்சா, நாளை உங்களைவிட வலிமையா னவங்க உங்களை அழிப்பாங்க.
இவ்வளவு சொல்லியும் உங்க முடிவு மாறலைன்னா முதல்ல என்னை அழிச்சுட்டு மத்தவங்களை அழிங்க.
இல்லை விநோ. யாரையும் அழிக்கப் போறதில்லை.
நீங்க பேசினதை எல்லாம் கேட்டதும் எங்க முடிவை மாத்திக்கிட்டோம். எங்க கிரகத்திலேயே வாழப் போறோம். அதுக் குப் புது யோசனைகள் பெற எங்க மக்க ளையே ஆலோசனை கேட்கப் போறோம்.
இப்பவாவது எங்களோடு வருவியா விநோ?



விநோ தனது அப்பா, அம்மாவுடன் புறப்பட, எல்லா விலங்குகளும் கையசைத்து அனுப்பி வைத்தன.
(முற்றும்)

படிக்க...



"ஹலோ ஆண்ட்டி, குட் ஈவ்னிங்!"

"வாங்க பசங்களா! உங்களைத் தான் எதிர்பார்த்துட்டு இருந்தேன். புதுசா நான்கு புத்தகங்களைப் படிச்சேன்."

"நான்கா? அப்போ எங்க செவிகளுக்கு நல்ல விருந்துதான்."

"கண்டிப்பா! வயித்துக்கும் விருந்து இருக்கு. இந்தாங்க நெய் முறுக்கு. எல்லோரும் எடுத்துக்கங்க. விஜி உனக்கு எத்தனை தெனாலிராமன்களைத் தெரியும்?"

"இதென்ன கேள்வி? இருக்கிறது ஒரு தெனாலிராமன்தானே?"

"இதோ இந்தப் புத்தகங்களைப் பாருங்க."

"அட! இலங்கைத் தெனாலிராமன் கதைகள், ஆப்பிரிக்கத் தெனாலிராமன் கதைகள், சீனத்துத் தெனாலிராமன் கதைகள், வங்கத்துத் தெனாலிராமன் கதைகள்னு விதவிதமா இருக்கே."



எத்தனை தெனாலிராமன்கள்?

"ஆமாம். இலங்கை அரசர் ராஜசிங்கின் அரசவை விதூஷகனாக இருந்த ஆந்த்ரே என்பவர்தான் இலங்கைத் தெனாலிராமன்."

"ஓகோ!"

"அதேபோல் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த அனான்சி, சீனத்தைச் சேர்ந்த 'ஈஃபண்டி', வங்கதேசத்தின் 'கோபால் பாண்டு' ஆகியோர்களின் கதைகளைத்தான் இப்படித் தொகுத்து வழங்கி இருக்கிறார் பேராசிரியர் சோதி. ஒவ்வொரு கதையிலும் அந்தந்த நாட்டின் பழக்க வழக்கங்களைத் தெரிஞ்சுக்க முடியுது. இந்த நான்கு தெனாலிராமன்களைப் பற்றி அறிமுகக் குறிப்புகளும் இருக்கு."

"புத்திசாலித்தனமா இருந்தா எதையும் சாதிக்கலாம்னு இந்தத் தெனாலிராமன்கள் சொல்றாங்க. அப்படித்தானே ஆண்ட்டி?"

"சரியா புரிஞ்சுகிட்டே பாபு. இந்தாங்க. ஆளுக்கொரு புத்தகத்தைக் கொண்டுபோய்ப் படிங்க."

"தேங்க்யூ ஆண்ட்டி."

ஆசிரியர் : பேராசிரியர் எ.சோதி
ஒவ்வொரு நூலும் 128 பக்கங்கள், விலை தலா ரூ.40/-
வெளியீடு: நன்மொழிப் பதிப்பகம், 16, கங்கை வீதி, வசந்த் நகர், புதுச்சேரி - 605 003

போட்டி























பரிசு
ரூ.1000/-

எது? எது?

இங்குள்ள பொருட்களில் ஒன்றுக்கொன்று தொடர்புடைய பொருட்களும், தொடர்பில்லாமல் இரண்டு பொருட்களும் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து, உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி மற்றும் வீட்டு முகவரியைக் குறிப்பிட்டு, கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். சரியான விடையளிக்கும் ஐந்து பேர் குலுக்கல் மூலம் தேர்வு செய்யப்பட்டு, ரூ.200/- வீதம் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும். ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.

கடைசித் தேதி : 15.2.2007

ஆசிரியர்,
கோகுலம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032


கோகுலம் தீம் பார்க்
வேடிக்கை
விளையாட்டு
புதிர் உலகம்
உங்களை
அன்புடன் வரவேற்கிறது
உங்கள் சின்னஞ்சிறு கைகள்,
பளபள கண்கள், சுட்டியான மூளை
அனைத்துக்கும் சவால்!

விடுகதைகள்

I. 1. செய்ததைச் செய்யும்; குரங்கும் அல்ல. சிங்காரிக்க உதவும்; சீப்பும் அல்ல - அது எது?

2. குண்டன் வாயில் குள்ளன் நுழைந்தால் குபேரப் பட்டணத்துக்கு வழி தெரியும் - அது என்ன?

3. வெள்ளிப் போர்வை உலகை மூடுது; வெயில் வந்ததும் விலகி ஓடுது - அது என்ன?

– ஜெய்னம்பு,
இராமநாதபுர மாவட்டம்

II. 1. எதிர்த்தே பேசுவான், யாருக்கும் விரோதியல்ல - அவன் யார்?

2. தோட்டா இல்லாமலே வெடிக்கும் துப்பாக்கி அது என்ன?

3. ஒரு போதும் தெரிவதில்லை; எப்போதும் ஓய்வதில்லை - நான் யார்?

– ஜே.ஜே.அனுஷா,
ஐந்தாம் வகுப்பு,
புனித அந்தோணியார்
துவக்கப் பள்ளி,
கொம்மடிக்கோட்டை

III. 1. ஊரெல்லாம் வம்பளப்பான்; ஓரறையில் அடங்கிடுவான் - அவன் யார்?

2. கிளையில்லாத சவுக்கு மரம்; வெட்ட வெட்ட வளருது – அது என்ன?

3. தச்சன் செய்யாத பெட்டி; தானே திறந்து மூடும் பெட்டி - அது என்ன?

- அ. அபிராமி, மூன்றாம் வகுப்பு,
ஊ.ஒ.தொ.பள்ளி, உத்திரமேரூர்

IV. 1. காலையில் உதிக்கும்; கதிரவனல்ல... வாசலை அலங்கரிக்கும்; தோரணமுமல்ல - அது என்ன?

2. அலை அலையாய் ஆடி வரும்; கடலும் அல்ல... நிலையாக இருக்காது நிலவும் அல்ல – அது என்ன?

3. அந்தரத்திலே பறக்கும்; பறவையல்ல... அழகான வாலுண்டு; குரங்கல்ல – அது என்ன?

– வி.ஆர்.கிருஷ்ணன்,
தஞ்சை

யார்கிட்டேயும் சொல்லிடாதே, விடைகள் 47–ஆம் பக்கத்துல இருக்கு!



குபேரப் பட்டணத்துக்கு வழி!

வண்ணம் தீட்டுங்கள்!

இந்தப் படத்துக்கு வண்ணம் தீட்டி அழகு படுத்துங்க பார்க்கலாம்!




குட்டீஸ் கோகுலம்

பொம்மையோ பொம்மை!

தாமுவிடம் நிறைய பொம்மைகள் உள்ளன. எந்தெந்த பொம்மை எத்தனை உள்ளதென எண்ணி கண்டுபிடிங்க!

விடை 47-ஆம் பக்கம்.



கண்டுபிடி! கண்டுபிடி!



இரண்டு படங்களிடையே உள்ள வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!

விடை 47-ஆம் பக்கம்.

குட்டீஸ் கோகுலம்

ஒன்று முதல் இருபத்தேழு வரையிலான புள்ளிகளை இணைத்தால் கப்பல் எங்கே போகிறதென தெரிந்து விடும்.



புள்ளிகளை இணையுங்கள்!

புதுமைப் போட்டி

வாவ்! புதுமைப் போட்டிக்கு ஒவ்வொரு மாதமும் வரவேற்பு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இது ஐந்தாவது மாதம். கடந்த மாதம் வந்த கூப்பன்களில் அறிமுகம் செய்யப்பட்ட நண்பர்களுக்கு இந்த இதழ் இலவசமாக அனுப்பப்படு கிறது. வழக்கம் போல் இந்த மாதமும் இடப் பக்கப் போஸ்டரை நீங்க பத்திரப்படுத்துங்க. வலப் பக்கப் போஸ்டரில் கையொப்பமிட்டு உங்கள் நண்பருக்குக் கொடுங்க. புதுமைப் போட்டி கூப்பனைப் பூர்த்தி செய்து, எங்களுக்கு அனுப்புங்க. கோகுலத்தைப் புதிதாக வாங்கத் தொடங்கி இருப்பவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள முடியாதா என்ற கேள்வி எழுந்துள்ளது. அவர்களும் கலந்து கொள்ளலாம். இப்போட்டியின் இறுதி மாதத்தில் பன்னிரண்டு எழுத்து களும் கொடுக்கப்படும். அவற்றை ஒழுங்குப்படுத்தி வாசகத்தைக் கண்டு பிடித்து, எழுதி அனுப்பலாம். அதற்கு இப்போது முதலே கூப்பன்களை அனுப்பி நண்பர்களை அறிமுகம் செய்யுங்கள். (புதுமைப் போட்டிக் கூப்பன் வேறு பக்கத்தில்)

அன்புடன் கோகு

புதிய வாசகர்களுக்காக போட்டி குறித்த விவரங்கள் :

* இது ஒரு புதுமையான போட்டி; பரிசும் புதுமையானது. நடுப்பக்கத்தில் ஒரே மாதிரியான இரண்டு போஸ்டர்கள் உள்ளன. இடது பக்க போஸ்டரில் இரண்டு எழுத்துகள் உள்ளன. அது போல் ஆறு மாதங்களுக்கு பன்னிரண்டு எழுத்துகள் வெளியாகும். அவற்றைப் பத்திரப்படுத்தி ஒழுங்கு படுத்தினால் ஒரு வாசகம் கிடைக்கும். அதை எழுதி அனுப்பினால் பரிசு கிடைக்கும்.

போஸ்டரைச் சேகரிங்க! பரிசுகளை வெல்லுங்க!

* வலப்பக்கப் போஸ்டரில் அன்புடன் என்பதற்குக் கீழே உங்கள் கையொப்பமிட்டு கோகுலம் படிக்காத நண்பருக்குக் கொடுக்க வேண்டும். பிறகு கூப்பனைப் பூர்த்தி செய்து எங்களுக்கு அனுப்ப வேண்டும்.
* நீங்கள் அறிமுகம் செய்த நண்பருக்கு அடுத்த இதழ் கோகுலம் இலவசமாக அனுப்புவோம். அறிமுகப்படுத்திய உங்களுக்குப் போட்டியின் முடிவில் புதுமையான பரிசுகள் காத்திருக்கின்றன. அதிகமான நண்பர்களை அறிமுகம் செய்பவர் நிஜமான தீம் பார்க்கில் ஜாலியா சுத்தப்போறீங்க!





கோகுலம்
போஸ்டர்
லம்


கோகுலம்
போஸ்டர்
அன்புடன்

குட்டீஸ் கோகுலம்

யாருக்குக் கிடைக்கும்?



நான்கு
பேர்களில்
யாருக்கு
பணப்பெட்டி
கிடைக்கும்? வழி
போட்டுப்
பாருங்கள்,
விடை தெரியும்!

சரியா? தவறா?

கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைப் படியுங்கள். சரியாக இருந்தால் சரி (✓) என்றும் தவறாக இருந்தால் (✗) தவறு என்றும் அந்தந்த கட்டங்களில் குறிப்பிடவும். தவறானவற்றுக்கு சரியான விடையையும் கண்டுபிடியுங்கள்! பிறகு 47-ஆம் பக்கம் சென்று சரி பார்த்துக் கொள்ளுங்கள்.



1. உலகிலேயே மிகவும் வேகமாக ஓடவல்ல மிருகம் சிறுத்தை

☐ சரி ☐ தவறு



2. இனிப்பின் சுவையை அறியாத விலங்கு பூனை.

☐ சரி ☐ தவறு

3. சூரியனுக்கு மிக அருகிலுள்ள கிரகம் புதன்

☐ சரி ☐ தவறு

4. டிராக்டரின் பழைய பெயர் 'புல் டாக்'

☐ சரி ☐ தவறு

5. உலகின் மிகச் சிறிய நாடு இலங்கை

☐ சரி ☐ தவறு

6. 'க்விஸ்' என்ற வார்த்தையின் பொருள் 'ஒன்றுமேயில்லை' என்பது

☐ சரி ☐ தவறு

7. காந்தியடிகளுக்கு மகாத்மா என்ற பட்டத்தை அளித்தவர் நேரு.

☐ சரி

☐ தவறு




புதையல்
கோட்டை!
1 2 3 4 5 6 7 8 9
1 2 3 4 5 6 7 8 9

ராஜ்

விளையாட்டு

இது மூன்று பேர் விளையாடும் 'த்ரில்' விளையாட்டு. தரை வழி (கார்), கடல் வழி (கப்பல்), வான்வழி (விமானம்) இவற்றில் ஆளுக்கொன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். பிறகு ஒரே அளவிலான முப்பது துண்டுச் சீட்டுகளைக் கத்தரித்து அவற்றில் கீழ்க்காண்பவற்றை எழுதிக் கொள்ளுங்கள்.

வான்வழி:

1. வானம் 2.மேகம் 3.மழை
4. சூரியன்
5. நிலா 6.நட்சத்திரம்
7. வானவில்
8. மின்னல் 9.இடி
10. பறவை.

கடல்வழி:


11. அலை 12. மீன்கள் 13. சுறா 14. பனிப்பாறை 15. கடற்கரை 16. துறைமுகம் 17. படகு 18. வலை 19. டால்பின் 20. துடுப்பு

தரைவழி:

21.சாலை 22.மரங்கள் 23.கட்டடங்கள் 24.வாகனங்கள் 25.விலங்குகள் 26.காடு 27.செக்போஸ்ட் 28.போலீஸ் 29.டிராஃபிக் 30.மனிதர்கள்.

சீட்டுகளை நன்றாகக் குலுக்கி ஆளுக்கொன்றை எடுத்துப் பிரியுங்கள். நீங்கள் தேர்ந்தெடுத்த வழிக்குப் பொருத்தமான சீட்டு வந்திருந்தால் முதல் கட்டத்துக்குச் செல்லுங்கள். உதாரணமாக வான்வழியைத் தேர்வு செய்தவருக்கு மேகம் என்றோ மழை என்றோ வந்தால் முதல் கட்டத்துக்குச் செல்லலாம். அப்படி சரியாக வந்த சீட்டைத் தனியாக எடுத்து வைத்து விட வேண்டும். மாறாக, வான்வழிக்காரருக்கு. அலை என்றோ சாலை என்றோ வந்தால் திரும்ப வைத்து விட வேண்டும். இதே விதிதான் மற்ற கடல், தரை வழிக்காரர்களுக்கும்.

இப்படியே ஒவ்வொரு கட்டமாக முன்னேற வேண்டும். யாருக்கு அவர் சம்பந்தப்பட்ட பத்துச் சீட்டுகளும் முதலில் வந்து விடுகின்றனவோ அவர் புதையல் கோட்டையை அடைந்து, புதையலை அள்ளி வெற்றி பெறலாம்!



கீழே உள்ள ஐந்து பேரும் என்னை மாதிரியே தெரிந்தாலும், ஒருத்தனை தவிர மற்றவர்களிடம் சின்னச் சின்ன மாற்றங்கள் இருக்கு. கொஞ்சமும் மாறாமல் என்னைப் போல இருப்பது யாருன்னு கண்டுபிடிங்க! விடை எதிர்ப் பக்கம்.



என்னைப் போல யாரு?



விடைகள் பக்கம்



விடுகதைகள்:

I. 1. கண்ணாடி
2. பூட்டு - சாவி 3.பனி

II. 1. எதிரொலி
2. மூக்கு - தும்மல்
3. காற்று

III. 1. நாக்கு 2. தலைமுடி
3. கண்கள்

IV. 1. கோலம் 2. புகை
3. பட்டம்

பொம்மையோ பொம்மை!

கார் - 3, ஹெலிகாப்டர் - 6, கடிகாரம் - 2, நாய் - 3, கரடி - 3 இங்க் பாட்டில் - 4, கிரிக்கெட் மட்டை - 4, பேனா - 2, துப்பாக்கி பொம்மை - 3, பம்பரம் - 2, கீ போர்டு - 1

கண்டுபிடி! கண்டுபிடி!

1. பறக்கும் பறவைகளின் எண்ணிக்கை
2. அமர்ந்துள்ள பறவையின் கால்கள்
3. மரம்
4. சிறுவனின் சட்டை
5. சிறுமியின் பேண்ட் பாக்கெட்

சரியா? தவறா?

1. சரி 2.சரி 3. தவறு (மெர்குரி)
4. சரி 5. தவறு (வாடிகன்) 6. சரி,
7. தவறு (ரவீந்தர்நாத் தாகூர்)

என்னைப் போல யாரு? : 3





வெட்டுங்கள்! ஒட்டுங்கள்!

இங்கே சின்னதாக உள்ள முயல் அண்ணாச்சியையும் ஆமைத் தம்பியையும் பெரிதாக்குங்கள்! அதற்கு நீங்கள் செய்ய வேண்டியது கீழே உள்ள எட்டு துண்டுகளை வெட்டி, ஒரு வெள்ளைத்தாளில் சரியாக ஒட்டுவதுதான்.



மீண்டும் சந்திப்போம்!



சமீபத்தில் நெதர்லாந்து நாட்டில் நடைபெற்ற கியூப் விளையாட்டுப் போட்டியில், பல பரிசுகளை அள்ளி வந்துள்ளான் திருச்சியைச் சேர்ந்த பள்ளி மாணவர் பெர்னட். உலக கியூப் அசோசியேஷன் நடத்திய 'டச் ஓபன் ரூபிக்ஸ் கியூப்-2006' சாம்பியன்ஷிப் போட்டி நெதர்லாந்தின் டெல்ஃப்ட் (Delft) நகரில் நடந்தது. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் சுமார் நாற்பதுக்கும் மேற்பட்டோர் போட்டியில் கலந்து கொண்டனர்.

திருச்சியைச் சேர்ந்த நினைவாற்றல் கலை வல்லுநர் ஜான் லூயிஸ் மற்றும் அவரது மகன் பெர்னட் ஓர்லாண்டோ (Bernet Orlando) ஆகிய இருவரும் இப்போட்டியில் பங்கேற்றனர். இந்தப் போட்டியில் கலந்து கொள்வதற்கென இந்தியாவிலிருந்து சென்று வந்தவர்கள் இவர்கள் இருவர் மட்டுமே. இதில் பெர்னட் ஓர்லாண்டோ, திருச்சி செயின்ட் ஜேம்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின் ஆறாம் வகுப்பு மாணவர்.

போட்டியில் இருபது வயதிலிருந்து ஐம்பது வயதானவர்கள் வரை பங்கேற்றதில், அவர்களுடன் களத்தில் நின்ற மிக மிகக் குறைந்த வயதுடைய போட்டியாளர் பெர்னட் ஒருவரே.

எட்டு வயதிலிருந்து, கடந்த மூன்று ஆண்டுகளாக கியூப் விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபட்டு வரும் பெர்னட், "பள்ளி



மாணவ - மாணவிகளுக்கு அவர்களுடைய நினைவாற்றலை வளர்க்க உதவும் விளையாட்டு இது. சுமார் நாற்பது வகையான கியூப்



விளையாட்டுகள் உலக நாடுகளில் உலா வந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் ரூபிக்ஸ் கியூப், சிவென்ஸ் கியூப், புரபொசர் கியூப், மெகா மின்ஸ் கியூப், பிரமின்ஸ் கியூப், டூ



• பெர்னட் ஓர்லாண்டோ


இன்ட் டூ மினி கியூப், ஸ்கொயர் ஒன் கியூப் போன்ற விளையாட்டுகளில் நன்கு பயிற்சி பெற்றுள்ளேன்'' என்கிறார் பெர்னட்.

அதனால்தான் உலக அளவில் நிகழ்ந்த கியூப் போட்டிகள் பலவற்றில் 'டாப் டென்' பட்டியலில் அவரால் இடம்பெற முடிந்திருக்கிறது. ஸ்கொயர் ஒன் என்ற கியூப் போட்டியில் 36.35 வினாடிகளில் சரியாக அமைத்து மூன்றாவது இடத்தையும், ட்ரிபிள் டூ கியூப் போட்டியில் 8.06 வினாடிகளில் சரியாக அமைத்து நான்காம் இடத்தையும் பெற்றுள்ளார். மேலும் கண்களைக் கட்டிக் கொண்டு மூன்று தனித்தனி கியூப்களை 87 நிமிடங்களில் சரியாக அமைத்துச் சிறப்புப் பரிசையும் பெற்றிருக்கிறார்.

சாம்பியன்ஷிப் ஆன ரூபிக்ஸ் கியூப் போட்டியில் 12.41 வினாடிகளில் சரியாக அமைத்து ஆறாவது இடத்தையும் பிடித்திருக்கும் பெர்னட், அதில் உலகச் சாதனையான 10.88 வினாடியை முந்திச் செல்வதே தன்னுடைய அடுத்த இலக்கு என்று கூறுகிறார். அடுத்து 2007-ல் உலகக் கோப்பை கியூப் போட்டிகள் (ஒலிம்பிக் போன்று) ஹங்கேரி நாட்டில் நடைபெறவுள்ளது. கியூப் பெட்டிகளை முதன்முதலாக உருவாக்கிய 'எர்னோ ரூபிக்ஸ்' என்பவர் தங்கியிருக்கும் 'புதாபெஸ்ட்' நகரில் அதன் போட்டிகள் நடைபெறவுள்ளன.

"அதில் கலந்து கொண்டு கோப்பையை வெல்வேன்'' என்கிறார் பெர்னட்.

கட்டுரை, படங்கள்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



ஹங்கேரி நாட்டில் வசித்து வரும் எர்னோ ரூபிக்ஸ் என்பவர்தான், உலகிலேயே முதன் முதலாக 1974-ல் இந்த கியூப் .விளையாட்டுப் பெட்டிகளை உருவாக்கியவர். பின்னர் 1980-ல் ஒரு கணிதப் பேராசிரியர் அதில் மேலும் பல நுட்பங்களைப் புகுத்தி வெளி உலகுக்கு அறிமுகப்படுத்தினார்.

இதைப்போன்ற கியூப் விளையாட்டுகள் 1982-ல் இந்தியாவுக்குள் அடியெடுத்து வைத்ததாகச் சொல்லப்படுகிறது.



மகாத்மாவின் குரு!



* மகாத்மா காந்தி இவரைத் தமது அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார்.

* சுதந்திரப் போராட்ட வீரர், அரசியல் தலைவர் என்பதையெல்லாம் தாண்டி வேறொரு முகமும் கோகலேவுக்கு இருந்தது. அவர் ஒரு சமுதாயப் புரட்சியாளர். "சர்வன்ட்ஸ் ஆஃப் இந்தியா சொஸைடி" என்ற அவரது இயக்கம் அடித்தட்டு மக்களுக்கும் சமூக சேவைகள் செய்தது.

* கோகலேவின் அப்பா கிருஷ்ணாராவ் ஒரு விவசாயி. விவசாயம் செய்



யவே அவர் விரும்பினாலும், அது முடியவில்லை. காரணம் அவர் வசித்த மகாராஷ்டிரத்தின் கோத்தாலூர் என்ற பகுதியில் அப்போது மண்வளம் இல்லாமல் போய்விட்டது. எனவே அவர் ஒரு குமாஸ்தாவாகப் பணிபுரிந்தார்.

* கோகலே கல்லூரியில் படித்தார். அப்போது அது மிகவும் பெரிய விஷயம்!

* பாலகங்காதர திலகர் நடத்திய "மராத்தா" என்ற வார இதழுக்கு அடிக்கடி கட்டுரைகள் எழுதி, அவரது பாராட்டுதலையும் பெற்றார். 1895-ல் பூனாவில் காங்கிரஸ் மாநாடு நடைபெற்றபோது, கோகலே அதன் வரவேற்புக் குழுவின் தலைவராக விளங்கினார்.

* நீரிழிவு நோயால் அவதிப்பட்டார். தவிர ஆஸ்துமா வேறு அவரைப் படுத்தி எடுத்தது.


* மே 9, 1966 அன்று இவரது நூற்றாண்டு விழா நினைவாக சிறப்புத் தபால் தலை வெளியிடப்பட்டது.

* மகாராஷ்டிரர்தான். ஆனால் மேற்கு வங்காளத்தின் மீது தனி மரியாதை கொண்டிருந்தார். "இன்று மேற்கு வங்காளம் நினைப்பதைத்தான் நாளை இந்தியா நினைக்கும்" என்று கூறியவர்.


* பாகிஸ்தான் உருவாகக் காரணமான ஜின்னா, "ஒரு முஸ்லிம் கோகலேவாக ஆவதுதான் என் விருப்பம்" என்று கூறி இருக்கிறார்!


ஜி.எஸ்.எஸ்.





ஆர். கார்த்திகேயன், ஆறாம் வகுப்பு, ஸ்ரீ ஜெயந்திர சரஸ்வதி வித்யாலயா, மே.நி.பள்ளி, கோவை





அ.பிரபாகரன்,
எட்டாம் வகுப்பு,
அ.உ.பள்ளி,
சோ.சித்தூர்,
பொள்ளாச்சி



ப. இனியன், பத்தாம் வகுப்பு, ஜெயகோபால் கரோடியா, தேசிய மே.நி.பள்ளி, சென்னை - 59







ஆர். நாராயணன்,
எட்டாம் வகுப்பு,
அரசினர் ஆண்கள்
மே.நி.பள்ளி,
பட்டுக்கோட்டை

கே. மஞ்சுளா,
பத்தாம் வகுப்பு,
அழகிரி சுரேஷ் அரசு மே.நி. பள்ளி,
ஆலங்கொம்பு



உங்கள் கைவண்ணம்!

ஆ.சாய் தருண், இரண்டாம் வகுப்பு,
செயிண்ட் சேவியர் மே.நி.பள்ளி, திருநெல்வேலி





ஓடி விளையாடினேன் பாப்பா!

குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா அவர்களின் மகள் தேவி நாச்சியப்பன். ஆசிரியையாக பணிபுரிபவர். இவரும் குழந்தைகளுக்காக எண்ணற்ற கவிதைகளைப் படைத்துள்ளார்.

“வணக்கம். எல்லாரும் உட்காருங்க. ஷ்... யாரும் பேசக் கூடாது. வீட்டுப் பாடம் செய்திட்டீங்களா?'' இதுதான் என் விளையாட்டு. குழந்தைகளா, என்ன விளையாட்டுனு புரியுதா? சரியாச் சொன்னீங்க. டீச்சர் விளையாட்டுத்தான்.

எங்க வீட்டு மொட்டைமாடி வேப்பமர நிழல்தான் வகுப்பறை. சின்னதாக இருக்கும் மூங்கில் சேர் (baby chair), அதற்கு முன்பாக ஒரு சிறிய டீப்பாய். அதுதான் டீச்சரோட நாற்காலி, மேசை. மேசை மேலே ஒரு நோட்டு, புத்தகம், கைப்பை, மறக்காமல் ஒரு மர ஸ்கேல். கரும்பலகைக்கு என்னுடைய சிலேட்டை ஒரு ஸ்டூலில், சுவரில் சாய்த்து வைப்பேன். பளிச்சென்று எழுதும் பல்பம்தான் சாக்பீஸ்.

நான்தான் டீச்சர். தரையை மாணவராக கற்பனை செய்து விளையாடினது கொஞ்சநாள். அப்புறம் தோழிகளான தங்கம், மீனா, ரேவதி எல்லாரையும் கூப்பிட்டு டீச்சர் விளையாட்டு விளையாடினேன். எப்பவும் என்னைவிடச் சின்னவங்களத்தான் டீச்சர் விளையாட்டுக்குச் சேர்த்துக்குவேன். அப்பத்தானே நான் டீச்சரா இருக்க முடியும்!

இந்த விளையாட்டுக்காக கஸ்தூரி அக்காவின் தாவணியைச் சேலையாகக் கட்டிக் கொள்வேன். வீட்டுக்குள்ள உட்கார்ந்து விளையாடறது பகல் நேரத்திலேதான். மாலை நேரம் வீட்டுக்கு வெளியே.

“கல்லா மண்ணா?'' விளையாட்டில் பிடிக்கிறவங்க கல்லில் நின்னா, மற்றவங்க மண்ணில் நிப்போம். கல்லைத் தாண்டி இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் ஓடுவோம். கல்லை மிதித்துத் தாண்டும்போது பிடிபட்டால் ‘அவுட்'னு வெளியே அனுப்பிடுவாங்க. விளையாடின அத்தனை பேரும் அவுட் ஆனதும் முதல்ல





அவுட் ஆனவங்க பிடிக்கணும்.

'மெள்ள வந்து கிள்ளிப் போ'ங்கற விளையாட்டு. அதிலே நாங்க இரண்டு அணியாப் பிரிஞ்சிடுவோம். அணிக்கு நான்கு பேர். எதிரெதிரா பந்தியிலே விருந்துக்கு உட்காருவோமே அதுபோல உட்கார்ந்துக்குவோம்.

எங்க அணியிலே இருக்கற ஒவ்வொருத்தருக்கும் மல்லி, தாமரை, ரோஜா, சாமந்தினு பூவோட பெயர்களை வைப்போம். அடுத்து எங்க அணியிலே இருந்து ஒருத்தி எழுந்து போய், எதிர் அணியிலே இருக்கும் ஒருத்தியோட கண்ணைத் தன் கையால மூடுவா. பிறகு எங்க அணியைப் பார்த்து 'மல்லிப்பூவே மெள்ள வந்து கிள்ளிப் போ, மல்லிப் பூவே மெள்ள வந்து கிள்ளிப்போ'னு 2, 3 தடவை சொல்லுவா.

எங்க அணியிலே 'மல்லிப்பூ'னு பேரு வச்சவ மெதுவா எழுந்து வந்து, கண்ணு மூடப்பட்ட நிலையில் இருக்கிறவளை மெதுவா கிள்ளிட்டு, ஒண்ணும் தெரியாதமாதிரி இடத்திலே போய் உட்கார்ந்திடுவா. இப்ப கண்ணைத் திறந்த அந்தப் பொண்ணு, யாரு கிள்ளிட்டுப் போனானு சரியாச் சொல்லணும். அப்படி சரியாச் சொன்னா ஒரு புள்ளி.

அடுத்து எதிரணியில இருந்து ஒருத்தி வந்து எங்க அணியிலே ஒருத்தியோட கண்ணைப் பொத்தி, ஒரு பூவோட பெயரைக் கூப்பிட்டுக் கிள்ளச் சொல்லுவா. அவுங்க அணியிலே இருந்து வந்து ஒருத்தி கிள்ளுவா.



அடிக்கடி இந்த விளையாட்டை விளையாடும் போது கிள்ளுகிற தினுசை வச்சே, கிள்ளியது யார்னு சரியாக் கண்டுபிடிச்சிடுவோம்!

இன்னும், நொண்டி அடிச்சுப் பிடிக்கறது, கட்டம் போட்டு 'பாண்டி' விளையாடுவது, 'மலையில் தீப்பிடிக்குது ஓடு ஓடு', 'உள்ளே வெளியே' இப்படி ஓடி ஓடி எத்தனை விளையாட்டுக்கள்? விளையாடும்போது எத்தனை சந்தோஷம்? விளையாடிய பிறகு கை கால் கழுவி, சாமி கும்பிட்டு, படிக்க உட்கார்ந்தா படிச்சதெல்லாம் நல்லா மனதிலே பதியும்.




குழந்தைகளே, இதுபோல விளையாட்டுக்களை உங்க பாட்டி, அம்மா, பெரியம்மா, அத்தைகிட்ட கேட்டு விளையாடுங்க. மகிழ்ச்சியா இருங்க!

தேவி நாச்சியப்பன்

படம் : தர்மா

இந்தப் பழம் இனிக்கும்!

கருத்து : எஸ். திவ்யா
8-ஆம் வகுப்பு
கிரீன்பார்க் மெட்ரிக் பள்ளி ஆத்தூர்



நீங்கள் மிகவும் விரும்பும் கோகுலம் உங்கள் வீடு தேடி வர சந்தா செலுத்துங்கள்.



பெயர்: ....

முகவரி: ....

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032



காற்று

காற்று என்பது என் பெயரே!
காடும் மலையும் என் ஊரே!
மூக்கின் வழியே உட்புகுவேன்
மூச்செனும் பெயரில் உயிர்காப்பேன்!

நாக்கின் வழியே பேச்சாவேன்
நாலா திசையிலும் நானிருப்பேன்
ஊரே உறங்கும் நேரத்திலும்
உழைப்பை என்றும் நான்மறவேன்!

கோபம் கொண்டால் புயலாவேன்
கொஞ்சி மகிழும் தென்றலாவேன்
உருவம் இல்லா போதினிலும்
உதவும் செயல்கள் எத்தனையோ!

- நெ.இராமன்,
சென்னை - 75

மயிலக்கா!

மயிலே மயிலே மயிலக்கா
வண்ணத்தில் நனைத்தது யாரக்கா?
இமைகளில் மையைத் தீட்டியது போல்
இறைவன் படைத்தது அழகக்கா!

தலையில் பூவை வைத்தது போல்
கொண்டையைக் கொடுத்தது யாரக்கா?
தோகையை விரித்தே காண்போரை
துள்ள வைப்பது அழகக்கா!

தொட்டுப் பார்க்கும் ஆசையில்
கிட்டே வந்தேன் நானக்கா
எட்டி எட்டிச் சென்றபடி
ஏமாற்றுவதும் சரியாக்கா?

- பொன்.சொர்ணவேல்,
செங்கோட்டை



உதவிக் கரங்கள்!





ஊனமுற்ற மனிதர் யாரும்
உடன்பிறந்த தோழர் போலவாம்!
உடலில் ஊனம் இருந்த போதும்
உள்ளம் உறுதி கொண்டதாம்!

கண்ணிரண்டில் ஒளி இழந்தும்
காட்சி மனதில் காண்பராம்!
கால்களிழந்த போதிலும்
கடமை செய்யத் துடிப்பராம்!

உழைக்கும் எண்ணம் கொண்டோருக்கு
உதவிக்கரங்களை நீட்டுவோம்!
அன்பாய்ப் பேசி அவர்கள் கொண்ட
ஆற்றலை வளரச் செய்வோம்!

- ப.இனியன்,
பத்தாம் வகுப்பு, ஜெயகோபால் கரோடியா, தேசிய மேல்நிலைப் பள்ளி,
சென்னை - 59


நவரத்தினங்கள்

ஆழி

வைரம், வைடூரியம், மாணிக்கம், புஷ்பராகம், நீலம், கோமேதகம், மரகதம், முத்து, பவளம் ஆகிய ஒன்பதும் நவரத்தினங்கள்.

நவரத்தினங்களில் முதன்மையானது வைரம். வைரம் என்பது உண்மையில் கரிதான்! லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர், மரங்கள் அடர்ந்த காடுகள், பலவித இயற்கை மாற்றங்களால் மண்ணுக்குள் புதைந்தன. அவை நிலக்கரி படிமங்களாயின. அந்தப் படிமங்களின் மீது மிக அதிகமான அழுத்தமும் வெப்பமும் தாக்கிய போது அவை வைரக் கற்களாயின!





வைரம் என்னும் சொல் 'வஜ்ரம்' என்னும் சமஸ்கிருதச் சொல்லிலிருந்து வந்தது. வஜ்ரம் என்றால் 'உறுதி' என்பது பொருள். உலகிலேயே மிகவும் கடினமான பொருள் வைரம்தான்! வைரங்கள் வெள்ளை, இளஞ்சிவப்பு, சிவப்பு, இளம் பச்சை, வெளிர் நீலம், கறுப்பு ஆகிய நிறங்களில் கிடைக்கின்றன. வைரங்கள், பல நூற்றாண்டுகளுக்கு முன், இந்தியாவிலிருந்தே உலக நாடுகளுக்கு அனுப்பப் பட்டன.




தென் ஆப்பிரிக்காவில் உள்ள 'கிம்பர்லி' நகரம்தான் உலகின் மிகப் பெரிய வைரச் சுரங்கம் உள்ள இடம். உலகில் கிடைக்கும் வைரங்களில் 97 சதவீதம் அங்கேதான் கிடைக்கிறது. 1871 முதல் 1914 வரை கிம்பர்லியில் 3 டன் வைரம் கிடைத்திருக்கிறது!




தோண்டி எடுக்கப்படும் வைரக் கற்களை அப்படியே ஆபரணங்களுக்குப் பயன்படுத்த முடியாது. அவற்றுக்கு ஒழுங்கான வடிவம் கொடுத்துப் பட்டை தீட்டினால்தான், அவை வெளிச்சம் பட்டுப் பிரதிபலித்து ஜொலிக்கும். ஒரு வைரக்கல்லில் பட்டைகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால், அதன் மதிப்பும் அதிகமாகும்.

வைரங்களை நிறுக்க 'காரட்' என்னும் எடைதான் பயன்படுத்தப் படுகிறது. ஒரு காரட் என்பது 2 கிராம்.

'கல்லினன்' என்னும் பெயர்கொண்ட வைரமே உலகில் மிகப் பெரிய வைரம். அதன் எடை 3106 காரட். அது 9 பெரிய துண்டுகளாகவும், பல சிறிய துண்டுகளாகவும் வெட்டப்பட்டது. மிகப் பெரிய துண்டு இங்கிலாந்து மன்னர் VII-ஆம் எட்வர்டின் செங்கோலிலும், அதற்கு அடுத்தபடியாக உள்ளது அவரது மணிமுடியிலும் பதிக்கப்பட்டன. மணிமுடி மிகவும் மதிப்பு வாய்ந்தது. அதில் 2783 வைரக் கற்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன.





பிரசித்தி பெற்ற சில வைரங்கள்: கோஹினூர், மொகல், ஆர்லா:ப், நாஸக், ஜேகப், ஜோன்கர்.



வைரங்கள் ஆபரணங்கள் செய்வதற்கு மட்டுமின்றி பல தொழில்களிலும் பயன்படுகின்றன. வைரம் மிகக் கடினமான பொருளாக இருப்பதால், அதில் இடப்பட்ட துவாரம் தேய்வதில்லை. வைரத்தின் துளையில் அகன்ற பக்கம் கம்பியை நுழைத்து, மிகக் குறுகிய மறு பக்கம் வழியே இழுக்கும் போது மெல்லிய கம்பி கிடைக்கிறது. வைரத்தை வைரத்தால் தான் அறுக்கமுடியும். கண்ணாடியையும் வைரத்தால் தான் அறுக்கிறார்கள்.

1928-இல், 'ஹார்சே' என்ற அமெரிக்க வேதியியல் விஞ்ஞானி கார்பனில் போதிய வெப்பத்தையும் அழுத்தத்தையும் செலுத்தி செயற்கை வைரங்களை உருவாக்கலாம் என்பதைக் கண்டுபிடித்தார். ஆனால், செயற்கை வைரங்களைத் தயாரிப்பதற்குச் செலவு அதிகம் ஆகும்.




வைடூரியம் என்பது தேன் நிறத்தில் இருக்கும். நடுவில் பளபளப்பான புகை நிறமும், வெள்ளி இழைகள் போன்ற கோடுகளும் கொண்டதாக இருக்கும். மேலும், சாம்பல், கறுப்பு, இளஞ்சிவப்பு, வெளிர் நீலம், ஆழ்ந்த மஞ்சள் ஆகிய நிறங்களிலும் வைடூரியம் இருப்பதுண்டு.







மாணிக்கக் கற்களைத் திட்டமிட்டுத் தேடி எடுக்க முடியாது. பெரும்பாலும் ஆற்றுப் படுகைகளைத் தோண்டும் போது தற்செயலாகத்தான் மாணிக்கம் கிடைக்கிறது. மாணிக்கம் பொதுவாகச் சிவந்த நிறத்தில் இருக்கும். இது வைரத்தை விட 3 மடங்கு விலை அதிகம். பர்மாவில் கிடைக்கும் மாணிக்கமே மிகச் சிறந்தது. மாணிக்கம் இந்தியா, பர்மா, இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பிரேஸில், சிரியா ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் கிடைக்கிறது.

மலைகளை வெட்டி புஷ்பராகத்தை எடுக்கிறார்கள். புஷ்பராகம் வெளிர் மஞ்சள் நிறமாக இருக்கும். ஆனாலும் மஞ்சள், வெள்ளை, இளஞ்சிவப்பு நிறங்களிலும் கிடைக்கிறது. இந்தியா, இலங்கை, பிரேஸில், சைபீரியா முதலிய நாடுகளில் புஷ்பராகம் கிடைக்கிறது.






நீலக்கல் உருண்டை வடிவில் கிடைக்கிறது. வைரத்திற்கு அடுத்தபடியாக உறுதி வாய்ந்தது. நீலம், வெளிர் நீலம், ஊதா நிறங்களிலும் கிடைக்கிறது. ஆற்றுப் படுகைகளில் மற்ற கற்களுடன் கலந்து அகப்படும். சுண்ணாம்புப் பாறையாலான மலைகளிலும் கிடைக்கும் பாறைகளை உடைத்து நீலக்கல்லைப் பிரித்து எடுப்பார்கள்.
இந்தியா, இலங்கை, பர்மா, ஆஸ்திரேலியா, பிரேஸில், கென்யா, பின்லாந்து முதலிய நாடுகளில் நீலக்கல் கிடைக்கிறது.



கோமேதகம் உருண்டை வடிவில் கிடைக்கும். மஞ்சள், வெள்ளை, சிவப்பு, ஆகிய மூன்று வண்ணக் கலவைகளை உள்ளடக்கியது கோமேதகம். ஆனாலும் வெளிர் பச்சை, வெளிர் சிவப்பு, பழுப்பு முதலிய நிறங்களிலும் கிடைக்கும்.


மரகதக் கற்கள் கரும் பச்சை நிறமானவை. இவை மண்ணுக்கு அடியிலோ, ஆற்றுப் படுகைகளிலோ இருந்து கொத்துக்கொத்தாகக் கிடைப்பவை. சில சமயம், எரிமலையிலிருந்து வெளிப்படும் கற்களை உடைத்துப் பார்க்கும் போது, சில கற்களின் அடுக்குகளுக்கு இடையே மரகதம் கிடைக்கும்.






சிப்பி என்னும் நீர்வாழ் பிராணியின் வயிற்றில் முத்து உருவாகிறது. ஏதோ ஒரு சிறிய பொருள் – சிறிய மணல், அல்லது சிறிய புழு – முத்துச் சிப்பியின் வயிற்றுக்குள் புகுந்து, அது உறுத்திக் கொண்டே இருக்கும் போது, அதைச் சுற்றிலும் ஒரு சுவர் உருவாகிறது. இப்படியே அதன் மேல் ஒவ்வோர் அடுக்காகப் படிந்து சில ஆண்டுகளில் உருண்டை வடிவம் பெற்று முத்தாகிறது. ஒரு முத்தில் 95 சதவீதம் 'கால்சியம் கார்பனேட்' என்னும் சுண்ணாம்புப் பொருள்தான்.

முத்துக்கள் பல வடிவங்களிலும் பல நிறங்களிலும் இருக்கின்றன. வெள்ளை, இளஞ் சிவப்பு, பசுமை கலந்த மஞ்சள், இளம் மஞ்சள், இளம் பழுப்பு, இளம் பச்சை, ஆரஞ்சு, ஊதா, பொன் நிறம், கறுப்பு என பல நிறங்களில் முத்துக்கள் இருக்கின்றன. முத்துக்களை 'கிரைன்' என்னும் எடையில் குறிப்பிடுகிறார்கள். 4 கிரைன் என்பது ஒரு காரட்.





தமிழகத்தில் மன்னார் வளைகுடாவில் கிடைக்கும் முத்துக்கள் தரம் வாய்ந்தவை. இதுவரை கிடைத்த முத்துக்களில் மிகவும் பெரியது பிலிப்பைன்ஸ் தீவுகளின் கடலில் கிடைத்தது தான். நீளம் 24 செ.மீ. குறுக்களவு 14 செ.மீ. இப்போது இந்த முத்து அமெரிக்காவில் ஓர் அருங்காட்சியகத்தில் இருக்கிறது.

இப்போது செயற்கை முத்துக்களையும் உருவாக்குகிறார்கள். சிப்பிகளைப் பிடித்து அவற்றின் உள்ளே மணல் போன்ற உறுத்தும் பொருள்களை வைத்துக் கடலில் விட்டு வளர்த்து முத்துக்களை உற்பத்தி செய்கிறார்கள்.



ஒரு முத்து இயற்கையானதா, செயற்கையானதா என்பதைப் பார்த்தவுடனே கண்டு பிடித்து விட முடியாது. எக்ஸ்-ரே மூலமே கண்டு பிடிக்கலாம்.



நவரத்தினங்களில் மிகவும் மலிவானது பவளம். கடலில் குழாய் போன்ற பூச்சிகள் தங்கள் உடலிலிருந்து வெளிப்படும் சுண்ணாம்புப் பொருளால் கூடு அமைத்துக் கொண்டு, ஒரே இடத்தில் நிலையாக வாழ்கின்றன. இவையே பவளங்கள். இவை நடுவில் உள்ள வாயைச் சுற்றிலும் இருக்கும் துதிக்கை போன்ற உணர்வு உறுப்புகளால் சிறிய உயிரினங்களைப் பிடித்துப் புசிக்கின்றன. இவற்றின் கூடுகள், மடிந்தபின் உலர்ந்து கெட்டியாக மாறும். இவற்றைப் பல வடிவங்களில் வெட்டி, மெருகேற்றி, ஆபரணங்களுக்கு ஏற்றபடி பவளமாக்குகிறார்கள். பவளங்களின் நிறம் சிவப்பு.

துப்பார் கையெழுத்து!





1. அடக்கம் உயர்வின் முதற்படி
2. ஆண்டவனை மனதில் இருத்த, ஆணவமும் அணுவும் அணுகாது.
3. இறை அருளால் மனஇருள் மறையும்
4. ஏ. என்றவன் திருப்பாதங்கள்
இறைவன் திருப்பாதங்கள்.


ச. நிவேதா,
மூன்றாம் வகுப்பு, மகரிஷி வித்யா மந்திர் மே.நி.பள்ளி, சென்னை - 94.



சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே அதைத்
தொழுது படித்திடடி பாப்பா. - பாரதியார்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
ஆலயந் தொழுவது சாலவும் நன்று.
- ஔவையார்.

இரா. வித்யா,
ஆறாம் வகுப்பு, பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
இலால்குடி.



நல்ல புத்தகத்தின் நோக்கம், நல்ல வழிக்கு நம்மை மாற்றுவதே ஆகும். புத்தகம் வாழ்க்கையை உயர்த்துவதாயிருக்க வேண்டும்; வாழ்க்கையை மறக்கடிப்பதாய் இருக்கக்கூடாது. அதையார் என்ன படித்தோம் என்று யோசித்துப் படியுங்கள்.

எல். ஹரிராம பாலசுப்பிரமணியன்,
ஆறாம் வகுப்பு, டி.டி.டி.ஏ. நடுநிலைப்பள்ளி,
தேமான்குளம்.

துப்பார் கையெழுத்துப் பகுதிக்கு வந்து குவிந்தவற்றில் தேர்வான மூன்று இங்கே.
மேலும் சில, இதே இதழில் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன.
மற்றவை அடுத்தடுத்த இதழ்களில் வெளிவரும்.

அன்புடன் ஜக்கு



ஹலோ தோழர்களே! கடந்த மாதம் ‘பதில் சொல்லுங்க, பரிசு வெல்லுங்க’ போட்டியை அறிவித்ததும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு உங்களுடைய திறமையை நிரூபித்து விட்டீர்கள், பலே! ஒவ்வொரு கேள்விக்கும் தலா இரண்டு பேரைத் தேர்ந்தெடுத்துள்ளோம். இரண்டாவது மற்றும் நான்காவது கேள்விகளுக்கான சரியான விடையைப் பலர் எழுதியிருந்ததால் குலுக்கலில் இரண்டிரண்டு பேரைத் தேர்ந்தெடுத்தோம். இம்மாதமும் ஐந்து கேள்விகள் உள்ளன. கலந்துக்கங்க; பரிசுகளை வெல்லுங்க!

இந்த வருஷம் புத்தாண்டுக்கு என்ன உறுதிமொழியை எடுத்தீர்கள்?

எங்கள் பக்கத்து வீட்டுப் பாட்டி மணியார்டர் பெற கைரேகை தான் வைப்பார். அறிவொளி இயக்கம் வந்தும் இப்படியா என வருந்திய நான் இந்தப் புத்தாண்டில் பத்து முதியவர்களுக்காவது கையெழுத்துப் போடக் கற்றுக் கொடுப்பது என உறுதியெடுத்தேன்.

- எஸ்.ஆர்.சங்கீதா,
எட்டாம் வகுப்பு,
சக்தி மெட்ரிகுலேஷன் மே.நி.பள்ளி, கனியாமூர்

மூன்றாவது ரேங்கில் இருக்கும் நான், முதல் ரேங்கிற்குச் செல்லவும், அக்காவுடன் சண்டை போடுவதை விட்டுவிட வேண்டும் எனவும்

நிலா நிலா நடந்து வா!



உறுதியெடுத்தேன்.

- ம.பார்த்தசாரதி, இரண்டாம் வகுப்பு, சன் வித்யாலயா, குருசிலாபட்டு

நாம் நடந்து கொண்டே நிலாவைப் பார்க்கும்போது அதுவும் நம்மோடு வருவது போலிருக்கே, ஏன்?

பூமியிலிருந்து நிலவு வெகு தொலைவில் இருக்கிறது. உண்மையில் அது நகர்வதில்லை. வெகு தொலைவில் உள்ள பொருட்களை நாம் பார்க்கும் கோணம் நாம் நகர்வதால் மாறுவதில்லை. அதாவது நாம் நடந்தவாறு பார்த்தாலும் நிலாவின் கோணம் மாறாது. எனவே அது நம்முடன் வருவது போல் தெரிகிறது.



- எஸ்.கே.அபிஷேக், நெய்வேலி
- ஆர்.அம்பிகா, மதுரை

நமது குடியரசுத் தலைவர் அப்துல்கலாமைச் சந்தித்து ஒரு பரிசு தரும் வாய்ப்பு கிடைத்தால், என்ன பரிசு தருவீர்கள்?



பேனாவைப் பரிசாகத் தருவேன். காரணம் நாட்டின் முதல் குடிமகனாக இருக்கும் அவர் பல முக்கியமான கோப்புகளில் கையொப்பமிட நான் வழங்கிய பேனாவைப் பயன்படுத்தினால் எனக்குப் பெருமையாக இருக்கும்.

- எஸ்.ஞானப்பிரகாசம், எட்டாம் வகுப்பு, அரசு மே.நி.பள்ளி, சேலம்

மரக்கன்று அளிப்பேன். அதன் மூலம் வருங்காலத்தில் தூய்மையான காற்று, பசுமையான பூமி கிடைக்கும்.

- ஆர்.பிரியதர்ஷினி, எட்டாம் வகுப்பு, மான்போர்ட் மெட்ரிக் மே.நி.பள்ளி, அரியலூர்



தரையில் தூரத்தைக் கிலோ மீட்டர் என்கிறோம், கடலில்



நாட்டிகல் என்கிறோம், வான் வழித் தூரத்தை எப்படி அழைக்கிறோம்?

ஒளியாண்டு

– த.விக்னேஷ், ஈரோடு,

– அ.க.ஸ்ரீராமன், சென்னை - 17

மாதா, பிதா, குரு, தெய்வம்... அடுத்ததாக யாரைச் சொல்லலாம்?

உற்றார் உறவினர்கள், நண்பர்களைச் சொல்லலாம். ஏனென்றால் நல்லது, கெட்டது போன்ற விஷயங்களின்போது நமக்கு உதவுவார்கள்.

– கே.கார்த்திகை ராமசுப்பு,
ஏழாம் வகுப்பு,
ஸ்ரீ ராமகிருஷ்ணா மே.நி.
பள்ளி,
திசையன்விளை

நல்ல புத்தகங்களைச் சொல்லலாம். ஏனெனில் அவை நமக்கு அறிவை அளித்து நல்வழிப் படுத்தி நம்மை உயர்த்தும்.

– கா. கணேசன்,
ஏழாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப்பள்ளி,
வேட்டனூர்

இம்மாத கேள்விகள்:

1. பிள்ளையாரை வணங்கும்போது தலையின் இரு பக்கமும் குட்டி, தோப்புக்கரணம் போடுவது எதற்கு?
2. வெள்ளை மயிலைத் தெரியுமல்லவா? அவை மட்டும் வண்ணம் இல்லாமல் இருப்பதன் காரணமென்ன?
3. திருக்குறளில் உங்களுக்கு மிகவும் பிடித்த குறள் எது? ஏன்?
4. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு - இதைப் போல் நீங்களும் மூன்று வார்த்தைகளில் சுலோகன் எழுதுங்களேன்!
5. உங்களுக்கு மிகவும் பிடித்த கார்ட்டூன் கதாபாத்திரம் எது? ஏன்?

ஓர் அஞ்சலட்டையில் ஒரு பதில் மட்டுமே இருக்க வேண்டும். 'அன்புடன் ஜக்கு' எனக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

கடைசி தேதி : 10.2.07

பானைக் குழந்தைகள்!

வழக்கத்தைவிட இன்று சந்தையில் நிறைய கூட்டம். அதனால் வியாபாரமும் நன்றாக நடந்தது. சூரியன் மேற்கில் இறங்கத் தொடங்கியதும் வியாபாரிகள் மூட்டைகளைக் கட்ட ஆரம்பித்தார்கள். அவர்கள் முகங்களில் மகிழ்ச்சி!

பரதனும் அவன் மனைவி தமிழரசியும் மாட்டு வண்டியில் பானைகளை அடுக்கிக் கயிற்றால் கட்டினர். பிறகு இருவரும் ஏறிக் கொண்டார்கள். பரதன் மாடுகளை உசுப்ப, அவை 'ஜல்!ஜல்!' என கயிற்று மணியின் தாளத்துடன் கிளம்பின.

"தமிழரசி! இன்று நல்ல வியாபாரம். நம்ம வழிப் பிள்ளையாருக்கு சூரைத் தேங்காய் உடைப்போமா?" என்று கேட்டான்.

"கண்டிப்பாக உடைக்கணும். அவர் அருளால்தான் தினமும் வயிறாரச் சாப்பிடுகிறோம்" என்றாள் தமிழரசி.

ஊருக்குச் செல்லும் வழியில் ஓர் அரச மரத்தடியில் இருந்தது வழிப் பிள்ளையார் கோயில். அந்தப் பக்கமாகச் செல்லும் அனைவரும் அவரை வணங்கி விட்டுத்தான் செல்வார்கள். அவரை நம்பினால் கைவிடமாட்டார் என்று சொல்வார்கள்.

பரதனும் தமிழரசியும் தினமும் அவரை வணங்குவர். ஒரேயொரு குறைதான் அவர்களுக்கு இருந்தது. திருமணமாகி எட்டு வருடங்களாகின்றன. குழந்தை இல்லை.

"கவலைப்படாதீர்கள்! இந்தக் குறையையும் பிள்ளையார் சீக்கிரமே தீர்த்து வைப்பார்" என்று பெரியவர்கள் ஆறுதல் கூறுவார்கள்.

அந்த நேரத்துக்கு மனத்தைச் சமாதானம் செய்துகொண்டாலும் பிறகு கவலை உண்டாகும். அன்றும் அப்படித்தான் வழிப் பிள்ளையாருக்கு சூரைத் தேங்காய் உடைத்து மனமுருக வேண்டிக் கொண்டு ஊர்த் திரும்பினார்கள்.

வீட்டை அடைந்ததும் பரதன் பானைகளைச் செய்யும் இடத்தில் வந்தமர்ந்தான். களிமண்ணையும் தண்ணீரையும் கலந்தான். அவனுடைய கைகள் வேகமாக இயங்கின. சக்கரத்தைச் சுழலவிட்டான். சற்று நேரத்தில் அழகான பானை உருவானது.

அது வழக்கமான பானை மாதிரி அல்லாமல் சற்று வித்தியாசமாக இருந்தது. அதற்குக் கால்கள், கைகள் போல் இருந்தன. சூளையில் வைத்து அதைப் பக்குவமாக எடுத்த பரதன் அதன் தலைப் பகுதியில் கண்கள், வாய் ஆகியவற்றை வரைந்தான். அதனை எடுத்துக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தான்.

மேஜிக் மாமா



"இன்னொரு பானையா? இப்படியே செய்து கொண்டு போனால் அந்த அறையில் வைப்பதற்கு இடமே இருக்காது" என்றாள் தமிழரசி.

"இப்படிச் செய்வது என் மனத்துக்கு ஆறுதலாக இருக்கிறது. நாளை நமக்குக் குழந்தைகள் பிறந்து வளர்ந்த பிறகு அவர்களிடம் இதை எல்லாம் காட்டுவேன்" என்ற பரதன் அந்த அறையின் கதவைத் திறந்தான்.

அங்கே வேறு பொருட்களே இல்லை. குழந்தையைப் போன்ற பானைகள் மட்டுமே இருந்தன! இப்போது செய்த பானையையும் அவற்றுடன் வைத்துவிட்டுத் திரும்பி வந்தான். இருவரும் சாப்பிட்டுவிட்டுப் படுத்தார்கள்.


விடியற்காலை நேரம். ஏதோ சத்தம் கேட்டு தமிழரசி கண் விழித்தாள். முதலில் அது என்ன சத்தம் என்பதே புரியவில்லை. பூனை அழுவது போலிருந்தது. பிறகு உற்றுக் கவனித்தபோது நிறையக் குழந்தைகள் ஒரே சமயத்தில் அழுதால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது அந்தச் சத்தம். 'எங்கே இருந்து வருகிறது?' என்று யோசித்தாள்.

"என்னங்க! என்னங்க! சீக்கிரம் எழுந்துருங்க" என்று பரதனை உலுக்கினாள்.

பரதன் திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தான். "என்ன தமிழரசி, என்ன ஆச்சு? திருடன் திருடன் வந்துட்டானா?" என்று கேட்டவாறு எழுந்தமர்ந்தான்.

"திருடன் இல்லே; குழந்தைங்க அழற சத்தம் கேட்குது" என்றாள் தமிழரசி.

"குழந்தைகளா?" என்றவன்



காதுகளைத் திட்டிக் கவனித்தான்.

"அட ஆமாம். பக்கத்தில் வீடுகளே இல்லை. எங்கே இருந்து கேட்கிறது?"

''தெரியலையா? அந்த அறைக் குள்ளிருந்துதான்'' என்றாள் தமிழரசி.

"உண்மைதான். அங்கே இருந்து எப்படி? ஏதாவது பேய்... பிசாசாக இருக்குமோ? என் அம்மா சொல் வாள். பேய்தான் நம்மை ஏமாற்ற அப்படிக் குரல் கொடுக்குமாம்'' என்றான் பரதன்.

''பேயுமில்லை, பிசாசுமில்லை! போய்ப் பார்ப்போம், வாங்க" என்று எழுந்தாள் தமிழரசி.

அப்போதும் பரதனுக்குப் பயம் போகவில்லை. "இரு! இரு! நீ போக வேண்டாம். முதலில் நான் போய்ப் பார்க்கிறேன்" என்றவன் அங்கிருந்த தடியைக் கையில் எடுத்துக்கொண்டு எழுந்தான்.

அந்த அறையை நெருங்கிக் கதவை மெதுவாகத் திறந்தவன் அப்படியே திகைத்து நின்று விட்டான். இப்போது அழுகை ஒலி சத்தமாகக் கேட்டது. அங்கே இருந்த பானைகள்தான் அழுது கொண்டிருந்தன. கண்கள் உயிர் பெற்று அப்படியும் இப்படியு மாகச் சுழன்றன. கை, கால்களை உதைத்துக்கொண்டன.

"த..தமிழரசி இங்கே வந்து பார்" என்று அழைத்தான்.

வேகமாக வந்து பார்த்த தமிழரசி யும் திகைத்துவிட்டாள். "இது என்ன கனவா, நிஜமா?" என்று கேட்டாள்.

அப்போது கடைசியாக இருந்த பானை மெதுவாக எழுந்து நின்றது.

''என்ன பார்த்துட்டு சும்மா நிற்கறீங்க? எங்களுக்குப் பசிக்குது. அதனால தான் அழுதுட்டு இருக் கோம். பால் கொண்டு வாங்க'' என்றது.

'அட, பானை பேசுகிறதே.' அது சரி குழந்தையைப் போல் அழும் போது பேச முடியாதா? ஆனால், இது எப்படிச் சாத்தியம்?' என்று யோசித் தான் பரதன்.

"என்னங்க நம்ம வேண்டு தலுக்காக பிள்ளையார்தான் இப்படி பானைகளையே குழந் தைகளா மாற்றி இருக் காருன்னு நினைக்கறேன். நான் போய்ப் பால் கொண்டு வரேன்" என்ற தமிழரசி அந்த இடத்தை விட்டுச் சென்றாள்.




"சீக்கிரம் சீக்கிரம்
பசிக்குது
சில்லுனு தரை
இருக்குது
ஆடைகள் வேண்
டும் எங்களுக்கு
அளித்தால் நன்றி
தங்களுக்கு''

என்று எல்லாம் கோரஸாகப் பாடின.

தமிழரசி பாலைக் காய்ச்சிப்

சிறுதுளி பெரு வெள்ளம்
செய்வதைத் திருந்தச் செய்
பதறாத காரியம் சிதறாது
பொறுமை காப்போம்
வாய்மையே வெல்லும்



- எஸ். ஸ்ரீநிதி, யூ.கே.ஜி.
கீதாஞ்சலி மெட்ரிக்குலேஷன் பள்ளி, கோயம்புத்தூர்



சூப்பர் கையெழுத்து!

பெரிய குண்டானில் ஊற்றி ஆற்றினான். பரதன் தன்னிடமிருந்த ஒரு பெரிய போர்வையைப் பல துண்டுகளாகக் கிழித்து அவற்றைச் சட்டையைப் போல் ஊசியால் தைத்தான்.

பாலை தம்ளர்களில் எடுத்து ஒவ்வொரு பானைக்கும் கொடுக்க அவை 'மடக்! மடக்'கென குடித்தன. பரதன் சட்டைகளை அணிவித்தான்.

'ஆகா ஆகா பால் அருமை
அம்மா தந்த பால் அருமை
அடடா அடடா சட்டை புதுமை
அப்பா அளித்த சட்டை புதுமை'

என்று பானைகள் சந்தோஷமாக ஆடிப்பாடின.

''சரி! சரி! நேரமாகுது. நீங்க எல்லாம் சமத்தா இருங்க. நாங்க சந்தைக்குப் போய் வியாபாரத்தை முடிச்சுட்டு வரோம்'' என்றான் பரதன்.

''நாங்க தனியா இருக்க மாட்டோம். உங்களோடு வரோம். எங்களுக்கும் சந்தையைப் பார்க்கணும்னு ரொம்ப ஆசை'' என்றது ஒரு பானை.

''மற்ற பானைகளோடு இவற்றையும் கொண்டு போகலாம்'' என்றாள் தமிழரசி.

வேறு வழியின்றி பரதனும் சம்மதித்தான். சாதாரண பானைகளோடு அவற்றையும் வண்டியில் வைத்துக் கட்டினார்கள். வண்டி, சந்தையை நோக்கிக் கிளம்பியது.

(சந்தையில் பானைக் குழந்தைகள் செய்யப் போகும் கலாட்டாக்களை அடுத்த இதழில் காண்போம்.)

சுழல் கோப்பை

கோகுலம் இதழில் ஓராண்டில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அந்தப் பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கி வருகிறோம். இந்த ஆண்டு உங்கள் பள்ளிக்குச் சுழல் கோப்பை கிடைக்க, படைப்புகளை உடனே அனுப்பி வையுங்கள். உங்கள் நண்பர்களையும் எழுதச் சொல்லுங்கள்.





* பனைக்குளம் ஏரி

ஜப்பான் விஞ்ஞானி ஒருவர் Optical Camoufage technology - ஐப் பயன்படுத்தி புதுவிதமான 'கோட்' ஒன்றை வடிவமைத்துள்ளார். இந்தத் தொழில் நுட்பம் மூலம் ஒரு பொருளைக் கண்ணாடி போல் ஆக்க முடியும். அதாவது அதன் வழியாக பின்புறத்தைத் தெளிவாகப் பார்க்க முடியும். அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர்கள் சிகிச்சையின்போது தங்கள் கைகள் மறைக்கும் பகுதியையும் ஊடுருவிப் பார்க்கும் வகையில் கையுறைகளில் இந்தத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தலாம் என்பது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாமல், விமானம் தரையிறங்கும்போது cockpit பகுதியிலிருந்து தரையை விமானி பார்க்கும் வண்ணம் அந்த இடத்திலும் இந்தத் தொழில்நுட்பம் உபயோகப்படும் என்று அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

இன்னொரு வேடந்தாங்கல்!

கோடைக் காலங்களில் நம் தாகம் தணிக்கும் பூசணிக்காய்கள் பற்றி நமக்குத் தெரியும். குளிர்ச்சியையும் புத்துணர்வையும் ஒருங்கிணைத்துத் தருவதில் பூசணிக்கு நிகர் வேறெதுவுமில்லை. இதுவரை உருண்டையாக மட்டுமே நாம் பார்த்துப் பழகியவை சதுரமாக கிடைத்தால் எப்படியிருக்கும்?

பூசணி எப்படிச் சதுரமாய் என்று ஆச்சர்யப்படுகிறீர்களா? ஜென்சுஜி என்கிற கிழக்கு ஜப்பான் விவசாயி, சதுர வடிவில் தர்பூசணியை பயிர் செய்யும் முறையைக் கண்டுபிடித்துள்ளார்! குளிர்சாதனப் பெட்டியில் ஏற்படும் இடப்பற்றாக் குறையைச் சமாளிக்கவே, யோசித்து இதுபோல் பயிர் செய்ததாக காரணம் சொல்லும் இவர், அது விளையும் போதே சதுர வடிவிலான கண்ணாடி கேனுக்குள் அதை நுழைத்து விடுகிறார்!

இத்தாலியின் மலையடிவார கிராமம் 'விஜனெல்லா.' இங்கு இருநூறுக்கும் குறைவானவர்களே வசிக்கிறார்கள். தரைமட்டத்திலிருந்து தாழ்வான பகுதியில் இக்கிராமம் அமைந்துள்ளதால் மழைக்காலங்களில், குறிப்பாக நவம்பர் முதல் பிப்ரவரி வரை எப்போதாவதுதான் சூரியக்





கதிர்களைப் பார்க்க முடியும். இது அவர்களுக்கு மிகப்பெரிய குறையாக இருந்து வருகிறது. இதைக் கேள்விப்பட்ட அப்பகுதி மேயர், அக்குறையை தனது சாதுர்யத்தால் நிவர்த்தி செய்து, மக்களின் பாராட்டைப் பெற்றுள்ளார். எப்படி?

ஐந்து மீட்டர் உயரமும், எட்டு மீட்டர் அகலமும் கொண்ட ஒரு ராக்ஷஸ கண்ணாடியை மலையுச்சியில் பொருத்தி, சூரியன் நகரும் திசையிலேயே கண்ணாடியும் சுழன்று சூரியக் கதிர்களை கிரகித்து கிராமப் பகுதிகளில் பிரதிபலிக்குமாறு செய்துள்ளார். இத்திட்டத்திற்கு டிசம்பர் பதினேழாம் தேதியன்று செயல்வடிவம் கொடுத்துள்ளனர்.

இந்தக் கண்ணாடி 1,00,000 யூரோ செலவில் தயாரிக்கப்பட்டது!

சீனாவில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதத்தில் வெப்பநிலை பூஜ்யத்திற்கும் கீழே குறைந்து கடுமையான பனிப் பொழிவு ஏற்படும். அப்போது அங்கே பனித் திருவிழா நடைபெறும். பனியிலேயே விதவிதமான சிற்பங்களை உருவாக்குவர். ஹர்பின் என்ற நகரில் உருவான பிரமாண்ட பனி கோபுரத்தைத்தான் இங்கே பார்க்கிறீர்கள்.



• சீன பனி கோபுரம்



• வித்தியாசமான 'கோட்'

குளிர்காலத்தில் வேடந்தாங்கலுக்கு வெளிநாட்டுப் பறவைகள் வருவது உங்களுக்கெல்லாம் நன்கு தெரியுமல்லவா? இதே கால கட்டத்தில் ராமநாதபுரம் 'பனைக்குளம்' என்ற ஊரின் அருகிலுள்ள ஆற்றுக்கும் நிறைய வெளிநாட்டுப் பறவைகள் வருகின்றன.

தொகுப்பு: **மகாரமேஷ்**

சூப்பர் கையெழுத்து




வெள்ளை நிறத்தொரு பூனை - எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதப் பூனை - அவை
பேருக்கொரு நிறமாகும்



- தி.ஹரிஹரசுதன்,
ஏழாம் வகுப்பு,
ஆதித்யா பிர்லா பப்ளிக் பள்ளி,
ரெட்டிபாளையம்.

ஒரு சமயம் முல்லா, பள்ளிவாசலில் எல்லோருடனும் சேர்ந்து தொழுது கொண்டிருந்தபோது ஒருவன் திடீரென்று "ஐயோ! ஞாபக மறதியாய் என் வீட்டு சன்னலை மூடாமல் வந்துவிட்டேன்" என்று சொன்னான். இதைக்கேட்ட பக்கத்திலிருந்தவன், "அமைதியான பிரார்த்தனையின் போது நீ பேசியதால், மீண்டும் நீ பிரார்த்தனை செய்ய வேண்டும்" என்றான். இதைக் கேட்ட முதலில் பேசியவன் "நீயும்தான் என்னுடன் பேசி, உன் பிரார்த்தனையைக் கலைத்துக் கொண்டாய். ஆதலால் நீயும் மீண்டும் ஒருமுறை பிரார்த்தனை செய்ய வேண்டும்" என்றான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த முல்லா," நல்ல வேளை,




- மு. அஜய்கௌதம்,
ஆறாம் வகுப்பு,
கொங்கு கல்வி
நிலையம், ஈரோடு



- பி.ரம்யா,
யு.கே.ஜி. ஸ்ரீ வாணி
மழலையர், தொடக்கப்
பள்ளி, பழவந்தாங்கல்

1. அறம் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண் எழுத்து இகழேல்.

1. உறவினர் வீடாய் இருந்தாலும், அனுமதி பெற்றே உள்ளே செல்ல வேண்டும்.
2. பொறுமை கசப்பானது, விளைவோ இனிமையானது
3. அன்பத்தை பொறுப்பதே வெறியை வெல்வதாகும்.
4. எல்லோரும் பேச ஆரம்பித்தால் கேட்பது யார்?
5. தன் வீட்டு விளக்கு என்று முத்தமிடலாமா?
6. காலத் தாழ்த்திச் செய்யும் உதவி உதவியன்று



- ம. அம்ஜத்துல் சர்றார்,
முதலாம் வகுப்பு,
ஆரோக்கியமாதா ப்ரைமரி
பள்ளி, பொள்ளாச்சி



- ச.அபூர்வா,
முதலாம் வகுப்பு,
டி.ஏ.வி. மேல்நிலைப்
பள்ளி, ஆதம்பாக்கம்

1. ஔவையார் என்ற பெயருடன் ஒரு பெண் புலவர் வாழ்ந்தார்.
2. ஔவையார் 100 ஆண்டுகளுக்கு முன்னம் வாழ்ந்தார்
3. அவர் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம், நல்வழி ஆகிய நீதி நூல்களைக் குழந்தைகளுக்காகவே எழுதியுள்ளார்.

1. சிந்தனையயும் செயலையும் ஒன்றாக ஆக்கு.
2. நடக்காதவன் காலில் சிலந்தி கூடு கட்டும்.
3. சிறு துளி பெரு வெள்ளம்.
4. காலம் பொன் போன்றது கடமை கண் போன்றது.
5. தனித்திரு விழித்திரு பசித்திரு.
6. உழைப்பே உயர்வுக்கு வழி.



- சியாம் குமார்,
இரண்டாம் வகுப்பு,
ஜவகர் பள்ளி,
நெய்வேலி டவுன்ஷிப்

பெரிய எழுத்து, குட்டிக்கதை!

ராமு தனது நண்பர்களுடன் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தான். திடீரென அவனுக்கு வயிறு வலித்தது. தாங்க முடியாமல் துடித்தான்.

"பாலு, பக்கத்துத் தெருவில் ஒரு டாக்டர் இருக்கிறார். அவரிடம் ராமுவை அழைத்துச் செல்வோம்" என்றான் சந்துரு.

ஆட்டோ ஒன்றை நிறுத்தி ராமுவை அதில் ஏற்றி, நண்பர்களும் ஏறிக் கொண்டார்கள். ஆட்டோ அடுத்த தெருவிலிருந்த மருத்துவமனையை அடைந்தது.

ராமுவைப் பரிசோதித்த டாக்டர் "பயப்படாதீங்க, தம்பிங்களா! சாதாரண வயிற்று வலிதான். இந்த மருந்தைச் சாப்பிட்டா சரியாயிடும்" என்றார்.

அவர் கொடுத்த மருந்தை ராமு சாப்பிட்டான். சொன்னதைப் போல வயிற்று வலி போய் விட்டது. ஆனால் திடீரென அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

'கணக்கு ஆசிரியர் கொடுத்த வீட்டுப்பாடத்தைச் செய்யவில்லை. திட்டு வாங்க வேண்டும். வயிற்று வலி போகவில்லை என்று சொல்லிவிட்டு வீட்டுக்குப் போய்விடலாம். நாளை ஆசிரியர் கேட்டாலும் இவர்கள் சாட்சி சொல்வார்கள்' என நினைத்தான்.

"ஐயோ டாக்டர்! என்ன மருந்து கொடுத்தீங்க? வலி போகவே இல்லை. பாலு, சந்துரு நீங்க ஸ்கூலுக்குப் போங்க. நான் என்னோட ஃபேமிலி டாக்டர் கிட்டே போய்க் காண்பிக்கறேன். அப்பதான் சரியாகும்" என்றான் ராமு.

இதைக் கேட்ட டாக்டருக்கு ராமு பொய் சொல்கிறான் என்பது புரிந்துவிட்டது. 'பொடிப்பயல், ஸ்கூலுக்குப்

போயே

போகாமல் இருப்பதற்காக வலி போகவில்லையென கதை விடுகிறான். இவனுக்குப் பாடம் புகட்டுவோம்' எனத் தீர்மானித்தார்.

"தம்பி பயப்படாதே! இப்படித் திடீரென வயிற்று வலி வந்து மருந்து கொடுத்தும் சரியாகவில்லை என்றால் ஐந்து நிமிடத்துக்குள் ஆபரேஷன் செய்ய வேண்டும். இல்லையென்றால் ஆபத்து. நான் இப்போதே சென்று ஆபரேஷனுக்கு ரெடி செய்யறேன். பசங்களா, நீங்க இவனை ஆபரேஷன் தியேட்ட



ருக்குக் கூட்டிட்டு வாங்க'' என்றார்.

இதைக் கேட்டதும் ராமு பயந்துவிட்டான். "ஒரு நிமிஷம் பொறுங்க; அட! எனக்கு வலி போயே போச்சு" என்றான்.

டாக்டர் சிரித்து "தம்பி, நமக்கென இருக்கும் பொறுப்பையும் கடமையையும் சரியாகச் செய்தால் இப்படித் தேவையில்லாமல் பொய் சொல்ல வேண்டியதிருக்காது; பிறகு சமாளிக்கும் சிக்கலும் ஏற்படாது, புரிகிறதா?'' என்று கேட்டார்.


ராமுவுக்கு வெட்கமாகி விட்டது. ''ஸாரி டாக்டர், இனிமே இப்படி நடந்துக்க மாட்டேன்'' என்றான்.

"டாக்டர், நீங்க ராமுவோட வயிற்றுவலிக்கு மட்டும் மருந்து கொடுக்கலை. அவனோட பொய் சொல்லும் குணத்துக்கும் கொடுத்துட்டீங்க. வயிற்று வலியோடு சேர்ந்து அதுவும் போயே போச்சு, போயிந்தே, இட்ஸ்கான்!" என்றான் சந்துரு.

அனைவரும் சிரித்தார்கள்.

- தே.வரதகிருஷ்ணன்,
எட்டாம் வகுப்பு,
டேவிட் சிரோமணி
மெட்ரிக் பள்ளி, ஓசூர்

போச்சு!



சாதனை தளிர்கள்!



அடுத்த இதழ் முதல் 'சாதனை தளிர்கள்' என்கிற புதிய பகுதி கோகுலத்தில் அறிமுகமாகிறது. பெரிய நகரம் முதல் குக்கிராமம் வரை எல்லா இடங்களிலும் இருக்கும் இளம் சாதனையாளர்களை வெளிச்சமிட்டுக் காட்டும் பகுதி.

விளையாட்டு, பேச்சுப் போட்டி, ஓவியம் என எதுவாக இருந்தாலும் சரி, அவற்றில் மாவட்ட அளவிலோ, மாநில அளவிலோ கலந்து கொண்டு பரிசு பெற்றிருந்தால், அது குறித்த விவரங்களை எழுதி அனுப்புங்கள். அத்துடன் சாதனை தளிரின் புகைப்படம். அந்த சாதனைக்காக கொடுக்கப்பட்ட சான்றிதழின் நகல் ஆகியவற்றை இணைக்க வேண்டும்.

சாதனையைப் புரிந்தவர்கள் நீங்களாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. உங்கள் தோழர், தோழியாகவும் இருக்கலாம். பள்ளி ஆசிரியர்களும் இதில் ஒத்துழைக்கலாம். சாதனை புரிந்த மாணாக்கர்களைப் பற்றி எழுதி அனுப்பலாம். முக்கியமான நிபந்தனை: அந்தச் சாதனை சமீப காலத்தில் செய்ததாக இருக்க வேண்டும். (அதிக பட்சம் மூன்று மாதங்களுக்கு முந்தையதாக) மிகவும் பழையது வேண்டாம். சிறந்தவை வெளியாகும். கோகுலம் சார்பாகவும் அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசை அளிப்போம்.

அன்புடன்
கோகூ



அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர்,
கோகுலம் - சாதனை தளிர்கள்,
47-NP. ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடு தாங்கல், சென்னை - 32







எப்படி? இப்படி?




இம்மாத இரண்டாவது அட்டையை ஒரு நிமிடம் பார்த்து விட்டு வாருங்கள். என்ன பார்த்து விட்டீர்களா? காயத்ரி எப்படி தைரியமாக சிங்கங்களின் அருகே சென்று பேசிக் கொண்டிருக்கிறாள் என்று ஆச்சர்யமாக இருக்கிறதல்லவா? உண்மையில் இரண்டு படங்களும் வெவ்வேறு இடங்களில் எடுக்கப்பட்டவை.

சிங்கங்கள் இருப்பது வண்டலூர் உயிரியல் பூங்காவில்; காயத்ரி இருப்பது அவளது வீட்டில். இரண்டு புகைப்படங்களையும் கம்ப்யூட்டரில் இணைத்து உருவாக்கியதுதான் மூன்றாவது அட்டையில் நீங்கள் காண்பது.

“இப்போது சினிமாக்களில் அதிகமாகப் பயன்படுத்தும் வார்த்தை கிராஃபிக்ஸ். பொய்யான ஓர் உருவத்தை உருவாக்கி அதை நிஜ உருவங்களுடன் சண்டையிடுவது போலவும் ஆடிப் பாடுவது போலவும் காட்டுவார்கள். அப்படித்தான் இதுவும். கம்ப்யூட்டரில் ‘ஃபோட்டோ ஷாப்’ என்ற மென்பொருளைப் பயன்படுத்தி இதுபோன்று செய்ய முடியும். நேரு மாமாவுக்கு நீங்கள் மலர்ச் செண்டு கொடுப்பது போலவும் காந்தி தாத்தாவுடன் சேர்ந்து இருப்பது போலவும் சுலபமாகச் செய்யலாம்'' என்கிறார் கோகுலம் லே-அவுட் ஆர்டிஸ்ட் ஸ்டீஃபன்.

இதுபோல் நீங்களும் இடம்பெற வேண்டுமா? அஞ்சலட்டை அளவிலான உங்களது புகைப்படத்தை அனுப்பி வையுங்கள். ‘ஃபோட்டோ பகுதி' என்று குறிப்பிட்டு கோகுலம் முகவரிக்கு அனுப்புங்கள்.



புஜ்ஜி

கருத்து, படம் : பிள்ளை




உங்கள் கைவண்ணம்!
சொ.கௌதமன்,
பத்தாம் வகுப்பு,
சிவபாக்கியம் முத்துசாமி மெட்ரிக் பள்ளி,
மாதேசம்பாளையம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / CC (S) DN / 109 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 47 / 06 - 08 * Registered as a Newspaper in Srilanka

உங்கள் குழந்தைகளின் வளமான எதிர்காலத்திற்கான ஆங்கில பயிற்சி

ALOHA English Smart
For ages 6 - 14

* ஆங்கிலத்தில் தன்னம்பிக்கையுடன் சரளமாக மற்றவர்களுடன் பேசவும்
* குழந்தைகளின் ஆங்கில எழுத்துத்திறனை வளர்க்கவும்
* மற்றவர்களுடன் எளிதான ஆங்கில சொற்களில் தெளிவாக பேசவும்
* குழந்தைகளின் கற்பனைத்திறனை எழுத்தின் மூலமாக வெளிக்கொண்டுவரவும்
* ஆங்கிலத்தில் குழந்தைகளின் முழுத்திறமையையும் புத்திசாதூர்யத்தையும் வெளிக்கொண்டுவரவும்



Become our Franchisee & join the successful ALOHA family

A / c Class Rooms
Small Batchs
Experienced
Faculties

ALOHA INDIA

(A division of K K Academy (P) Ltd)
An ISO 9001 : 2000 Company
'Deccan Heritage', New No. 521, II Floor, Anna Salai, Nandanam,
Chennai - 600 035, Tamil Nadu, India. **Ph : 24361144 / 9940299992**
Email : info@alohaindia.com Web : www.alohaindia.com